முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 18—12—59 | வெள்ளி | ஒலி: 34

உறுமிய தமிழ்ச் சிங்கமே; ஒய்ந்ததோ உந்தன் மூச்சு?

பசுமலை தந்த தமிழ்மலை மறைந்துவிட்டதாம்; பாழும் செய்தி கூறுகிறது இப்படி. செந்தமிழுக்கு இன்னல் வந்தபோதெல்லாம் சங்காரம் நிசமென்று முழங்கிய சங்கு தீக்குழிக்கு இரையாகிவிட்டதாம். இத்திங்கள் 14-ம் நாளிரவு நாவலர். டாக்டர். சோமசுந்தர பாரதியார் இயற்கை எய்தினர் எனும் சேதியைக் கேள்வியுற்ற தமிழ் நெஞ்சங்களில் செந் தீ புகுந்தது. அந்தோ.... இணையற்ற புலமையும், ஆதிக்கக் கணை தாங்கும் மார்பும், வக்கணை பேசுவோரை மிரட்டிடும் மீசையும், அணை கடந்த வெள்ளமென வரும் சொல்லும் படைத்த நாவலர் நம்பக்கம் —என இறுமாந்திருந்த தமிழ்க்குலம் இன்று கண்ணீர் வடிக்கிறது.

வழக்கறிஞராய் இருந்தபோது வடகத்திச் சழக்கர்களின் தமிழ்க் கொலைக் கண்டு சீறி எழுந்தார்; தமிழ் இலக்கிய உலகம் சேர்ந்தார். அரசாங்கம் ஆலவட்டம் சுற்ற அரியணை ஏறிட முனைந்த இந்தி மொழியை இழுத்துக் கீழே தள்ளிய இந்தி எதிர்ப்பு அறப் போரின் தளபதிகளில் ஒருவரானர்.

'தீங்குள்ள இந்தியை எதிர்ப்போம்; உயிர்த் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!' — என்று முழங்கினர். அன்று முழங்கிய முழக்கம் இன்று வரை தேயவில்லை. உடலும் ஊனும் தேய்ந்த போதுங்கூட!

விந்தியத்திற்கு அப்பால் வாழும் அட்டகாசப் பரம்பரையும், அதனைத் தொழுது வாழும் இந்நாட்டு அடிமைக் கூட்டமும் தமிழினத்துக்குத் தீங்கு நினைக்கும் போதெல்லாம் தடை போட்டு, அவர்களின் ஆசைக் கோட்டையை உடைத்தெறிந்தார்; தமிழர் உள்ளமெல்லாம் குடி புகுந்தார்.

அத்தகைய தமிழ்க் காவலர், தமிழ் ஊறும் நாவலர் நம்மை விட்டுப் பிரிந்தார். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள்! நாவலரே! எங்கள் விழிகளைக் குளமாக்கி நீங்கள் பிரிந்தாலும், மொழி உணர்ச்சி விழி திறந்துவிட்டுச் சென்றீர்கள்! அந்த விழி யெனும் மொழி காப்போம்; அம்மொழியின் விடுதலைக்கு வழி வகுப்போம். வீரம் கொழிக்கும் உங்கள் திருவுருவின்மீது ஆணை!

ஊராள வந்த உத்தமர்களே! உழவர்களின் தோழராவீர்!

சி. ஐம்பு

(தமிழகத்தில் நிலச்சீர்திருத்தம் உருவான வகையில் நடைபெற பல்வேறு தரப்பினரின் விடாமுயற்சியாலும், தளராத உழைப்பாலும் சட்டம் விரைவில் வரவிருக்கின்ற இந்த நேரத்தில் ஐரோப்பிய நாடுகளில் நிலச்சீர் திருத்தம் பற்றிய சட்ட விபரங்களை, நிலைமைகளை கட்டுரையாளர் சுருக்கமாக விளக்குகின்றார். இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ள நிலச்சீர்திருத்தம் குறித்து இக் கட்டுரை விளக்குகின்றது.)

இங்கிலாந்து:

இங்கிலாந்தில் விவசாயத்தை நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள் மொத்த மக்கட் தொகையில் 100-க்கு 5 பேர்களே உள்ளனர். விவசாயத்தைவிட கால்நடைகள் வளர்ப்பதில்தான் அதிகக் கவனம் காட்டப்படுகின்றது. விவசாயம் மேற்கொள்ளப்படுகின்ற நிலத்தைவிட கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் மூன்று மடங்காக இங்கிலாந்தில் இருக்கின்றன.

பொருளாதாரத் துறையில் முன்னேறுத நாடுகளில் விளங்குவதைப்போல பெரும் விவசாயப் பிரச்சினைகளோ, நிலப்பசியோ 19—ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே இங்கிலாந்தில் இல்லை. விவசாயத் துறையைக் காட்டிலும் வேறு துறையில் அங்கு நிறைய வேலை வாய்ப்புகள் உண்டு. முன்னேற்றமுறுத நாடுகளில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்போர் தேவையைவிட மிதமிஞ்சி இருப்பதால் வேறு துறைகளில் அவர்களை ஈடுபடச் செய்வதுவும் ஒரு சிக்கலான பிரச்சினையாக இருந்து வருகின்றது. ஆனால், இங்கிலாந்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வேறு துறைகளுக்கு சென்றுவிடாமல் இருப்பதற்கான நிலைமையை சரியாக உருவாக்குவது அரசின் கடமையாக இருக்கின்றது.

நமது நாட்டு நிலைமைகளுக்கும், இங்கிலாந்தின் நிலைமைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் மலிந்திருப்பதால் நிலப்பிரச்சினையைப் பொறுத்தமட்டில் அந்நாட்டைப் பின்பற்றுவதற்குரிய வழிதுறைகள் மிகக் குறைவு. என்றாலும், பயன்படுத்தாத நிலங்களிலிருந்து சிறு நில உடைமைகளை உருவாக்குவதால், உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு வசதிகள், போன்றவைகளில் ஆங்கிலேய அரசு மேற்கொண்ட சில நடவடிக்கைகள் நமக்கு சில வழிமுறைகளைத் தெளிவாக்கலாம்.

இங்கிலாந்தில் அப்போது ஏற்பட்டுள்ள நிலச்சீர்திருத்த சட்டங்கள் அனைத்தும் புரட்சி எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டோ, அன்றி தீவிர மாறுதல்களை கொண்டுவரவேண்டும் என்னும் இடதுசாரி மனப்பான்மையாலோ உருவானவை அல்ல. புதிய சிறு நிலஉடைமைகளை ஏற்படுத்துதல், சாகுபடிதாரர்களுக்கு பாதுகாப்பையும் வசதிகளையும் அளித்தல் என்னும் இரு நோக்கங்களுடனேயே இங்கிலாந்தில் நிலச்சீர்திருத்தம் நடைபெற்றுள்ளது.

முதலில் சிறு நிலஉடைமைகள் உருவாக்குவது பற்றிய சட்டங்களையும், பின்னர் சாகுபடிதாரர்களுக்கான சட்டங்களையும் விவரிப்போம்.

1892—ல் சிறு நிலஉடைமைகள் சட்டம் இங்கிலாந்தில் கொண்டுவரப்பட்டது. விவசாயத் தொழிலாளர்கள் நகரங்களுக்குச் சென்று குடியேறுவதைக் கட்டுப்படுத்த வேண்டி அவர்களுக்கு கிராமங்களிலேயே சொந்த நிலங்கள் சுலபமாய் உரிமையாக்கிக்கொள்ள வழிவகை காணுவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். கௌண்டி கௌன்சில்கள், பரோக்கள் என்று சொல்லப்படுகின்ற உள்ளாட்சி மன்றங்கள் சிறு நில உடைமைகளைத் தேவையான இடங்களில் உருவாக்க இச்சட்டப்படி அதிகாரம் அளிக்கப்பட்டது. நிலம் வாங்குவதற்கான மூலதனத்தைக் குறைந்த வட்டி விகிதத்தில் அவைகளுக்கு அரசு வழங்கும். முன்கூட்டியே விலையில் ஐந்தில் ஒரு பங்கை விவசாயி முன்பணமாக உள்ளாட்சி மன்றத்திடம் தந்து நிலத்தைப் பெறவேண்டும். உள்ளாட்சி மன்றங்களிடமே சிறு நிலஉடைமைகள் நிறுவும் முழுப்பொறுப்பும்இருந்ததால்இச்சட்டம்வெற்றி பெறவில்லை. 1892—லிருந்து 1906 முடிய உள்ள 14 ஆண்டு காலத்தில் 790 ஏக்கர்கள் கூடுதல் கொண்ட நில உடைமைகளே அமைக்கப்பட்டன.

மேற்சொன்ன சட்டத்தின் குறைகளைக் களைய மீண்டும் 1908—ல் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டப்படி கௌண்டி கௌன்சில்களும், கௌண்டி பரோக்களும் சிறு நிலஉடைமைத் தேவைகளை கட்டாயம் தீர்த்துவைக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டது. சிறு நிலஉடைமையின் உச்ச அளவு 50 ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. உள்ளாட்சி மன்றங்கள் இக்கடமைகளை நிறைவேற்றவில்லையெனில், விவசாய மந்திரி இப்பிரச்சினையில் கருத்து செலுத்தி, நமது நாட்டிலுள்ள தாலூகா, மாவட்டம் ஆகிய நிர்வாகப் பிரிவு போன்ற கௌண்டிகளின் சிறுநிலஉடைமைத் தேவைகளை அந்த அளவு நிறைவேற்ற இயலும என ஆராய இச்சட்டப்படி அமைக்கப்பட்ட சிறு உடைமைகள் கமிஷனர் மூலமாக ஆவன ஆற்ற வழி உள்ளது. நிலம் பெறுபவன் 60 ஆண்டு காலத்தில் 6 மாத தவணைகளில் பணம் தந்தாகவேண்டும். முதல் தவணைக்குவருகின்றதொகையை முதலில் தந்ததும், நிலம் பெறுபவனின் சொந்தமாகிவிடும். தவணைத் தொகைகளை நிலம் வளமுற வேண்டி செலவு செய்தால் முதல் ஐந்தாண்டு காலத்திற்கு தவணைத்தொகை கட்டாமலிருக்க சட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. 1908—லிருந்து 1918 முடிவுள்ள 10 ஆண்டு காலத்தில் 1,83,877 ஏக்கர்கள். இப்படிப்பட்ட சிறு நில உடைமைகளுக்கு கொண்டுவரப்பட்டு, சராசரி 14 ஏக்கர் அளவுள்ள 13 ஆயிரம் பண்ணைகள் நிறுவப்பட்டன.

1919—ம் ஆண்டில் இன்னுமொரு சட்டம் வந்தது. இச்சட்டப்படி சிறு நிலஉடைமைகள் அமைப்பதற்காக கௌண்டி கௌன்சில்கள் அரசாங்கத்திடம் கடன் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இக்காரியத்திற்காக 2 கோடி பவுன் மூலதனத்தில் ஒரு நிதியும் நிறுவப்பட்டது. இச்சட்டப்படி. உள்ளாட்சி மன்றங்கள் 2,54.520 ஏக்கர்கள் கொண்ட 16,500 பண்ணைகள் உருவாகின.

1926—ல் சிறு நிலஉடைமைகள் ஒதுக்கல் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டப்படி உள்ளாட்சி மன்றங்கள் பெறும் சிறு நிலஉடைமைகளில் நட்டம் ஏற்பட்டால், நட்டத் தொகையில் முக்கால் பங்கை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும். மேலும் உள்ளாட்சி மன்றங்களை சிறு நிலஉடைமை கமிஷனர்கள் மேற்பார்வையிடுவர். சிறு நிலஉடைமைகளை விற்பதற்கு முன்னால் உள்ளாட்சி மன்றங்கள் பெரும்பாலும் வேலி போட்டு, நீர் வசதி செய்து தந்து, நிலத்தைச் செப்பனிட்டு உடன் விவசாயம் மேற்கொள்ளும் நிலையை ஏற்படுத்திவிடும்— இப்படிப்பட்ட நிலஉடைமைகளை அடைவதற்கு ஆசைப்படுபவர்கள் சொந்த சாகுபடி செய்யவும், அதற்கான அறிவுபெற்றவர்களாகவும் இருந்தால்தான் பெறமுடியும். இச்சட்டப்படி 1932 முடிய 30,814 ஏக்கர்கள் கொண்ட 1274 பண்ணைகள் அமைக்கப்பட்டன.

இப்படியாக 30 ஆண்டுகளில் சுமார் 40 ஆயிரம் சிறு நிலஉடைமைகள் மேற்கண்ட சட்டங்களின் விளைவாக உருவாகி கிராமங்களில் இருந்த முயற்சி மிக்கோருக்கு உதவி விவசாயத்தை ஓரளவு வளர்த்தன. தனிப்பட்டவர்களுக்கு ஒரு அரசு ஊக்கத்தை எவ்வாறு ஊட்டலாம் என்பதற்குஇச்சட்டங்கள் சான்றுகளாகும்.

அடுத்தபடியாக சாகுபடிதாரர்கள் உரிய முறையில் சுயேச்சையுடன் விவசாயம் மேற்கொள்ள தக்க பாதுகாப்புக்கான சட்டங்கள் பற்றிய விபரத்தை அறியு முன்னர் இங்கிலாந்தின் நிலபிரபுக்கள் — சாகுபடிதாரர்கள் உறவு நிலைமை குறித்து தெரிந்து கொள்ளவேண்டும். பெரும் எஸ்டேட்டுகள், நிறைய நிலங்கள் அக்ரமித்துள்ள முதலாளித்துவ நிலப் பிரபுக்கள் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றனர். 100 ஏக்கர்களுக்கு மேல் அடங்கியுள்ள பண்ணைகளே அதிகம். ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போல இந்த நிலப் பிரபுத்துவ முறை இங்கிலாந்தில் வெறுக்கப்படுவதில்லை. மூன்றில் இரண்டு பங்கு நிலங்களை சாகுபடிதாரர்களே விவசாயம்செய்து வருகின்றனர்— என்றாலும், உழவர்களுக்கே நிலம் உரிமை என்ற கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர சாகுபடிதாரர்

[தொடர்ச்சி 8—ம் பக்கம்]

★ அண்ணா பேச்சில்... ★

“ சட்ட சபையில் அமைச்சர் சுப்பிரமணியம் கேட்டார், ‘உங்களுக்கும் சுதந்திரா கட்சிக்கும் ஒப்பந்தம் ஏதாவது இருக்கிறதா?’—என்று. நான், ‘இருக்கிறது’ என்றேன். ‘என்ன ஒப்பந்தம்?’ என்றார். ‘நாங்கள் இருவரும் மோதிக் கொள்வதில்லை என்கிற ஒப்பந்தம்’ என்றேன்.

“ ஆச்சாரியாரின் சுதந்திரா கட்சியினால் காங்கிரசிற்குத்தான் பெருத்த சங்கடம்! ‘மோடி பரம்பரை எனக்கா உனக்கா?’ —‘பிர்லா பெட்டி உனக்கா எனக்கா ?’ — டாட்டா பணம் உனக்கா எனக்கா ?’ — என்று அவர்களுக்குள்ளேதான் சண்டை ஏற்படப்போகிறது !

“அடுத்த தேர்தலில், காங்கிரசுக்குப் பணம் கொடுத்த பணக்காரர்கள் சுதந்தரா கட்சிக்கும் கொடுக்கப் போகிறார்கள். போன தடவை தேர்தலில் ரூ. 50 இலட்சம் காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்ததென்றால், இப்போது ரூ. 30 இலட்சம் தான் கிடைக்கும்! ரூ. 20 இலட்சம் சுதந்திரா கட்சிக்குக் கிடைக்கும் !

“ சுதந்தரா கட்சியில் இருக்கும் வி. பி. மேனன் என்ற முக்கியமானவர் ஒரு பத்திரிகையில் எழுதினார் — ‘9 மந்திரிகள் இலஞ்சம் வாங்கியதாக வழக்குப் போட்டால் அவர்கள் கடுந தண்டனைக்கு ஆளாவார்கள் ; ஆனால் என்னை வழக்கு போடவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள்’— என்று ! இப்படி பகிரங்கமாகச் சொன்ன வி. பி. மேனன் மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை; மான நஷ்ட வழக்கும் போடவில்லை !

“ இன்னும் நாட்கள் செல்லச் செல்ல, இதுபோல் காங்கிரசின் ஊழல்கள் நமக்கு அறிமுகமாகும், சுதந்திரா கட்சியினால்.”

வெள்ளி 18—12—59 சென்னை

'தேசியம்'-இரு மாநிலங்களில்

பாரதத்து மாநிலங்களிலேயே மிகப் பெரியது என்ற பெருமைக்குரியதாகக் கருதப்பட்ட பம்பாய் மாநிலம், இனி இரண்டு துண்டாக்கப்படுமாம்! ஆண்டுகள் பலவாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த போராட்டம் வெற்றியடைகிறது; காங்கிரஸ் காரியக் கமிட்டி, அந்த மாநிலத்தை குஜராத் என்றும், மகாராஷ்டிரம் என்றும் பிரித்து விட முடிவு செய்து விட்டது!

இது எளிதில் கிடைத்த முடிவல்ல; நெடுங்காலக் குழப்பத்திற்குப்பின்—இரத்தச் சகதியிலே பாரத புத்திரர்களின் உடல்கள் பல மிதந்து சென்றபின்—அதைத் தெப்பமாகக் கொண்டு 'இந்தியத் தேசியம்' பவனிவர டெல்லி செய்த பெரு முயற்சிகள் தோற்றபின்—அங்கே இரண்டு மாநிலங்கள் தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன!

"பம்பாயைப் பிரியவிட மாட்டோம்! குறுகிய இன—மொழி வெறியினால் அரசியலமைப்பு விதிகளை மாற்றுவது சுலபமல்ல!"—இப்படிப் பேசினார் பண்டிதர்! தொண்டை வறண்ட பின்னால் போலீசை அழைத்தார்; இராணுவத்தைத் தேடி ஓடினார்; துப்பாக்கிகளைப் பேச விட்டார்!

"சம்யுக்த மகாராஷ்டிரத்தைக் கொடு!"

"எங்கள் உரிமை—எங்கள் குஜராத்!"

இந்த முழக்கத்திற்கு முன்னால் ஈடு கொடுக்க முடியாமல் திண்டாடியது டெல்லி! பேசச் சென்றவர்கள் மூக்குடைபட்டுத் திரும்பினார்கள்! பம்பாயின் முதலமைச்சர் சாவான் உபதேசிக்கச் சென்ற இடத்தில் கருப்புக் கொடிகளைக் கண்டு பயந்து திரும்பினார்! எவரது பேச்சை இன்று உலகம் உன்னிப்பாகக் கவனிக்கிறதோ, அந்த பெருமைக்குரிய பண்டித நேரு, வாயைத் திறக்க முடியாமல் திணறி ஓடினார் ஒரு முறை; அவரது பேச்சைக் கேட்காது வெறுத்து விரட்டினர் அந்தப் பகுதி மக்கள்!

பனிரெண்டு ஆண்டுகளாக அவர்கள் போதித்து வருகின்ற 'ஒற்றுமை'யும் 'தேசிய'மும் எங்கே போயிற்று? மொழி உரிமை—மாநில உரிமை என்ற சாதாரணமான பிரச்சினைகள் எழுகின்றபோதே பண்டிதரது படத்தைக் கொளுத்துகிறார்கள்; காந்தியாரின் சிலைகளைத் தூள் தூளாக உடைக்கிறார்கள்!

போலீஸ் இருந்து என்ன பலன்?

இராணுவத்தால் சாதிக்க முடிந்ததென்ன?

பண்டிதரின் வீராவேசச் சூறாவளிப் பேச்சால் என்ன ஏற்பட்டு விட முடியும்?

எதனாலும், அவர்கள் இருதயத்தைப்போல் கருதிவரும் 'தேசிய'த்தைக் காப்பாற்ற முடியவில்லையே! கனவு கண்டு வருகிற 'ஒற்றுமை'யை உருவாகக் காண முடிவதில்லையே!

விந்தியத்திற்கு வடக்கே வாழுகின்ற இரண்டு மொழிக்காரர்களே ஒற்றுமையாக இருப்பதில்லை! பொருளாதார அடிப்படையில் உயர்வான நிலையை டெல்லி வாரி வழங்கினாலும் பலன் இல்லை! ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்பு கொண்டும், ஒரே மாநிலத்திலே வசிக்கின்ற நிலையிருந்தும் ஒற்றுமையைக் காண முடியவில்லை!

பம்பாயின் குறுக்கே அரிவாள் விழுகிறது!

டெல்லியின் அதிகாரம் துண்டாடப்படுகிறது!

அதன் 'தேசிய கீத'த்திலே கீறல்!

—இந்த உண்மையை; பம்பாய் எடுத்துக் காட்டுகின்ற இந்த படப்பிடிப்பை ஏனோ நமது மாநிலத்து அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்! அவர்களது கண்களிலே 'காந்தீயம்' அப்பிக் கொண்டதா; அல்லது 'பதவிப் பேராசை' என்ற சதை வளர்ந்து கிடக்கிறதா என்று சந்தேகித்தோம் முதலில்! ஆனால் இப்போது உண்மை புலப்படுகிறது; அவர்கள் தாங்களே வாரி வீசிக்கொண்ட 'தேசியம்' என்ற புழுதிதான் கண்களைக் குருடாக்கிவிட்டிருக்கிறது; பார்க்கும் சக்தியைப் பறித்துக் கொண்டிருக்கிறது!

அதிகாரமனைத்தும் டெல்லியிடம்; நம் மாநிலத்தின் வருவாய் அனைத்தும் அங்கேதான்! அதோடு நம்முடைய மானம், கௌரவம் அனைத்தும்கூட அங்கேதான் அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது! கொடுமையிலும் கொடுமை! ஏதேனும் தேவையெனில் காவடி தூக்குகின்ற கேவலமான செயல்—இந்த இழிநிலை ஏன்?

—இப்படி திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கின்ற நேரத்தில் எல்லாம் இங்கிருப்பவர்கள் 'தேசியம்' பேசுகிறார்கள்! இந்திய ஐக்கியத்தைக் காப்பாற்றும் ஆசை இருந்தால், டெல்லி சில அதிகாரங்களை எடுத்துக்கொள்வதில் வெறுப்படையக் கூடாது—என்றும் சொல்லுகிறார்கள்!

இது சோத்தைக் காரணம்—அடிமை மனப்பான்மையின் அவல ஓலம்—என்று நாம் சொன்னபோது சீறிப் பாய்ந்தீர்கள்; எதுமறியாதவர்கள் என்று எளனம் செய்தார்கள், தமிழகத்தை ஆளுகின்ற பரிதாபத்திற்குரிய அமைச்சர்கள்!

ஆனால், இன்று அவர்களுக்கு முன்னாலேயே—தேசியத்தைப் பெட்டிப் பாம்பாகக் காத்து வருகின்ற சட்ட மன்றத்திலே—அவர்களது முகாமிலிருந்தே 'தேசிய' எதிர்ப்புக் குரல், கிளம்புகிறது; டெல்லியின் அதிகாரத் திமிர் குறித்து குற்றச்சாட்டுகள் பறக்கின்றன!

"அபிவிருத்தித் திட்டங்களுக்கு உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குக் கிடைப்பதுபோல் பணம் சென்னைக்குக் கிடைப்பதில்லை! இனியாவது இம்மாநில நிதியமைச்சர் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; மூன்றும் திட்டத்தொகையைப் பங்கு பிரிக்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!"

—என்று காங்கிரஸ் உறுப்பினரான முத்தையா செட்டியார் சொல்லியிருக்கிறார்!

"நீலகிரியில் கிடைக்கின்ற 'ஸ்டெயின்லஸ் ஸ்டீல்' விஷயத்தில் டெல்லி சர்க்கார் கவனம் செலுத்தாது இருப்பதானது 'மாற்றாந் தாய்' மனப்போக்கின் விளைவாகும்"

—இப்படிச் சொல்லியிருப்பவர் நீலகிரிப் பகுதி காங்கிரஸ் உறுப்பினரான மாதா கவுடர்.

"சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை துவக்கப்படுவது இன்னும் பேச்சளவிலேயே நிற்கிறது. கனரக மின்சார இயந்திரம் சென்னை மாநிலத்தில் அமையும் என்று சொன்னார்கள்; கடைசியில் அது போபாலில் அமைக்கப்பட்டுவிட்டது! சென்னையைத் தொழில் மயமாக்கும் பிரச்சினையில் டெல்லி சர்க்காரிடம் சென்னை சர்க்கார் எதுவுமே செய்ய முடியாதது வருந்தத் தக்கதே!

—என்று மேல் (சட்ட) சபை உறுப்பினரான ரஜாகான் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

"பெரும் தொழில்களைப் பொருத்தமட்டும் சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு புறக்கணிக்கப்படுகிறது."

—இது 1955-ல் சென்னை சர்க்காரே அமைத்த ஆலோசனைக் குழுவின் அழுகுரல்!

இவ்வளவையும் அறிந்த பின்னரும் நமது அமைச்சர்கள் 'தேசிய'த்தின் பெயரால் அடிமைத்தனத்தை வளர்க்கலாமா?

பம்பாயிலே 'தேசியம்' கல்லறைக்குள் போகிறது, அது உரிமைக்குத் தடையாக இருப்பதால்!

ஆனால், இங்கேயோ தேசியத்திற்குக் கோவில் கட்டப்படுகிறது; அதனால் நம் மானமே போனபின்னும்!

இந்த இழிநிலை மாறும் நாள் எந்நாள்?

12—12—59 அன்று சென்னை 42-வது வட்ட தி. மு. க. வின் சார்பில் நடைபெற்ற சிந்தப்பா (மொய்தீன் பிச்சை) நிதியளிப்புக் கூட்டத்தில், சிந்தப்பாவின் புதல்வர் காசிம் அவர்களிடத்தில் தோழர் மு. கருணாநிதி, மாவட்ட கழக சார்பில், ஐநூறு ரூபாய் நிதியளிக்கிறார்.

"காஞ்சித் தலைவன்" திரைப்படமாகிறது!

தோழர் மு. கருணாநிதி எழுதி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நாடகமாக நடிக்கவிருந்த 'காஞ்சித் தலைவன்' திரைப்படமாகவே தயாரிக்கப்படுகிறது. வாதாபி கொண்ட பல்லவப் பேரரசன் நரசிம்மவர்மனின் வீர வரலாற்றைக் கூறும் அந்தச் சரிதம் தழுவிய திரைப் படத்தில் புரட்சி நடிகர் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிருர். சத்தியா பிலிம் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தினர் தயாரிக்கின்ற அப்படத்தை எம். ஜி. சக்கரபாணி 'டைரக்ட்' செய்கிருர். இசை அமைப்பை என். எஸ். பாலகிருட்டினன் அவர்களும், பாடல்கள் எழுதும் பொறுப்பை கவிஞர் கண்ணதாசன் அவர்களும் ஏற்றிருக்கின்றனர்.

புரட்சி நடிகர் நடிக்கும் மற்ற படங்கள்!

மேலும், புரட்சி நடிகர் அவர்கள் மூன்று புதிய படங்களில் நடிப்பதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

அவைகளில் ஒன்று, எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் தயாரித்து, நாட்டு மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்ற 'நாடோடி மன்ன'னின் தொடர் ஓவியமாகும். 'நாடோடியின் மகன்' என்ற பெயர் கொண்ட அத் திரைப் படத்தின் கதையை எம்ஜியார் பிக்சர்ஸ் கதை இலாக்கா எழுத, வசனம், பாடல்களைக் கவிஞர் கண்ணதாசன் எழுதுகிருர். என். எஸ். ராமதாஸ் டைரக்ட் செய்கிருர். இசையமைக்கும் பொறுப்பு எஸ். எம். சுப்பையாவினுடையது. தயாரிக்கும் நிறுவனத்தின் பெயர், கதிரவன் பிக்சர்ஸ்!

அடுத்தது, பாலசூர்யா பிக்சர்சார் தயாரிக்கும் 'கேரளக் கன்னி'யாகும்! கேரளத்துப் பெண் ஒருத்தியின் காதல் வரலாற்றைச் சித்தரிக்கும் அக்கதையை ஆர். ஆர். சந்திரன் டைரக்ட் செய்கிருர். இசை அமைப்பை என். எஸ். பாலகிருட்டினன் கவனிக்க, கதை—வசனத்தை ரவீந்திரன் எழுதுகிருர்.

மூன்ருவதாக, புரட்சி நடிகர் டைரக்ட் செய்கின்ற 'தேனாற்றங் கரை" என்ற திரைப்படமாகும். மனித சரித்திரத்தில் ஆரம்பமான முதல் போராட்டத்தைச் சித்தரிக்கும் அந்தக் கற்பனைக் கதையை வே. லட்சுமணன் எழுதியிருக்கிருர்; வசனம் கவிஞர் சுரதாவினுடையது. இசை அமைக்கும் பொறுப்பை டி. ஆர். பாப்பா ஏற்றுக் கொண்டிருக்கிருர். அது ஒரு ஏ. ஆர். வி. பிக்சர்ஸ் தயாரிப்பு!

நடிகர் தின விழா!

6—12—59 அன்று, சென்னையில் நடைபெற்ற நடிகர் தின விழாவில், நடிகைகள் விளையாட்டுப் பந்தயங்களில் கலந்துகொண்டார்கள். படத்தில் கரண்டியில் எலுமிச்சம்பழம் வைத்து ஓடுகின்ற விளையாட்டில் அவர்கள் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

படத்தின் மூலம் நல்லறிவு போதனை!

திரைப்படத்தின் உதவியால் குற்றம் புரிந்து சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்ற கைதிகளுக்கு நல்லறிவு புகட்டும் முயற்சியில் சென்னை அரசு ஈடுபட்டிருக்கிறது. கல்வியைப் போதிக்கவும் திரைப்படத்தைப் பயன்படுத்த முடியும் என்று அரசினர் நம்புகின்றனர். சென்னை, வேலூர் மத்திய சிறைகளில் இந்தத் திட்டம் முதலில் சோதனை செய்யப்படும் என்று உள்துறை அமைச்சர் கனம் பக்தவத்சலம் 7—12—59 அன்று சட்டசபையில் தெரிவித்தார்.

'ஆளப்பிறந்தவன்'

இயலாத காரியத்தை எப்பாடுபட்டேனும் செய்திட விரும்பும் புரட்சி உள்ளங்கள், நாட்டில் மட்டுமல்ல; திரையுலகிலும் உண்டு. அதிலும் குறிப்பாக மேனாட்டுக் கலையுலகில் அந்த இரும்பு நெஞ்சர்கள் ஏராளம். அவர்களில் தலைசிறந்தவர் ஜான் ஹஸ்டன் எனும் ஹாலிவுட் டைரக்டர்.

அவர் தற்போது இந்தியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் விரிவான பயணம் நடத்தினர். படப்பிடிப்பிற்கான இடங்களைத் தேர்ந்தெடுக்கத்தான் இந்தப் பயணமாம்!

கதை எந்த இடத்தில் நிகழ்ந்ததோ அதே இடத்தில், அதே சூழ்நிலையில் எடுப்பதில் ஆர்வம் காட்டி வருபவர் ஹஸ்டன். அதன்படி நாவலாசிரியர் ருட்யார்ட் கிப்ளிங் என்பார் எழுதிய 'ஆளப்பிறந்தவன்' எனும் கதை இந்தத் துணைக் கண்டத்தில் நடந்த கதையாம்! எனவே இங்கு அவர் தங்கவிருக்கிருர்.

பலகோடி டாலர் செலவில் இந்தத் திரையோவியத்தைத் தயாரிக்க முனைந்துள்ளார், அந்த மேனாட்டுக்காரர். பெரும் செலவில் மாத்திரம் படம் தயாரிப்பது போதாது; பெரும் இடையூறுகளை ஏற்றுக்கொண்டு படம் தயாரிப்பதே அவருக்கு மகிழ்ச்சி தருமாம். சினிமாப் படம் எடுக்க முடியாதது—என்று எல்லோராலும் கைவிடப்பட்ட கடினமான கதை எதுவாக இருந்தாலும், இவர் அதை எடுத்துப் படமாக்குவதில் வல்லுநர். அந்த 'அபாய விளையாட்'டில் அவருக்குத் தணியாத ஆர்வம் உண்டாம்.

உலகத்தாரால் பாராட்டப் பெற்ற பெரும் வெற்றிப் படங்களைத் தயாரிக்க இவர் துணை புரிந்தவர். 'ஆப்ரிக்க ராணி' 'சியாரா மாட்ரி புதையல்'— ஆகிய படங்கள் இவரது பெருமை கூறும் திரையோவியங்களாகும்.

இந்த 'ஆளப்பிறந்தவனை' உருவாக்கும் கரு அவர் மனதில் நெடு நாளாக வளர்ந்து வந்ததாகும். மூன்று ஆண்டுகளுக்கு முன் இந் நாடு வந்தார். திட்டம் தீட்டினர். ஆனல் அதில் பெரும் பாகமேற்று நடிக்கவிருந்த ஹம்பிரி போகார்ட் மாணமடையவே திட்டத்தை ஒத்திப்போட்டு விட்டார். இப்போது முக்கிய பாத்திரங்களில் சர். லாரன்ஸ் ஆலிவர், பிராங்க் சினட்ரா முதலியோர் நடிக்கின்றனராம்!

இப்பெரும்படம் யுனிவர்சல் இண்டர்நேஷனல் ஸ்தாபனத்தின் ஆதரவில் தயாரிக்கப்படுமாம்!

நடிப்பிசைப் புலவரின் புதிய நாடகம்!

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் "பத்தாயிரம் பொன்" என்ற பெயருள்ள புதிய நாடகம் ஒன்றை தன் குழுவினருடன் நடிக்கத் தயாரித்துக்கொண்டிருக்கிருர். 'பகுத்தறிவு' ஆசிரியரான ப. கண்ணன் கதை வசனம் அமைத்திருக்கும் அந்தக் கதை குமணன் சரித்திரத்தைக் கூறுவதாம். அதிகப் பொருட் செலவில், கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் நாடகத்தை அமைத்துக் கொண்டிருக்கிருர், நடிப்பிசைப் புலவர்!

வீரமங்கை வேலுநாச்சியார்!

ஸ்புட்னிக் பிக்சர்சின் பிரமாண்டமான தயாரிப்பான இப்படம்பாரமவுண்ட்ஸ்டுடியோவில் வேகமாக வளர்ந்து வருகிறது.

சரித்திரச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட இந்தப் படத்தில், 'வீரமங்கை வேலுநாச்சியா'ராக அமைதியே உருவான பண்டரிபாய் ஆர்ப்பாட்டத்துடன் — வீரமே உருவாக நடிக்கிருர்.

'வளையாபதி' முத்துகிருஷ்ணன், பிரண்ட் ராமசாமி, அசோகன், கே. கண்ணன், சந்தியா, எம். எஸ். எஸ். பாக்கியம், என். சாந்தா, ராதாராணி மற்றும் பலர் சிறப்பாகநடித்து வருகிருர்கள்.

திரைக்கதை வசனம் பிரம்மம் எழுத, ஏ. எம். ராஜா இசையமைக்க. கோபிநாத் டைரக்ஷனை கவனிக்கிருர்.

தெலுங்கில் மரகதம்

பட்சிராசா படத் தயாரிப்பு நிறுவனத்தின் திரையோவியமாகிய 'மரகதம்' தெலுங்கு மொழியில் தயாரிக்கப்படுகிறது இப்படத்தில் என். டி. ராமராவும் சாவித்திரியும் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனா.

பழைய பல்லவி!

காங்கிரஸ்: எனப்பா தி. மு. கழகம்! மூக்கு இருக்கிறதா?

தி. மு. கழகம்: உன் கண்கள் தான் நல்லா யிருக்கேப்பா! கருப்புக் கண்ணாடிகள் கூட காங்கிரசை விட்டே ஓடிவிட்டார்களே; உன் பார்வையிலே என்ன கோளாறு?

காங்: இப்படிப் பேசிப் பேசித் தானே உங்களால் வாழமுடிகிறது? இந்த நேரம் உங்களுடைய மூக்கெல்லாம் அறுபட்டுக் கீழே விழுந்திருக்க வேண்டுமே என்று கேட்டேன்!

தி. மு. க.: ஏனப்பா; அருப்புக் கோட்டையில் காங்கிரஸ் தோற்றதாகத்தானே செய்திகள் படித்தேன்!

காங்: நீ ஏன் அங்கே ஓடுகிறாய்? அதுதான் பழைய கதையாயிற்றே! எங்கள் அமைச்சர் பேசி யிருக்கிறாரே; படித்தாயா?

தி. மு, க.: உங்கள் அமைச்சர்களில் பேசத் தெரிந்தவர் ஒன்றிரண்டு பேர்தானே? நீ யாரைக் குறிப்பிடுகிறாய்?

காங்: போலீசு அமைச்சர் கனம் பக்தவத்சலனாரை!

தி. மு. க: என்ன பேசினார்? விலைவாசி உயர்வுக்குக் காரணம் நெல்லு மரத்திற்குச் சரியாக தண்ணீர் ஊற்றாததுதான் என்று சொன்னாரா? அல்லது ஏழைகளின் ஏக்கப் பெருமூச்சால்தான் பயிர்கள் எல்லாம் வாடிவிட்டன; நாங்கள் என்ன செய்வது?—என்று வருந்தினாரா?

காங்: அதில்லை அப்பனே! நீங்கள் பழைய பல்லவியைத் தான் திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருக்கிறீர்களாம்!

தி. மு. க: எனக்குப் பாடவே தெரியாதப்பா! மார்கழி மாதமல்லவா; அமைச்சருக்குத் தான் 'பஜனை' ஞாபகம் வந்திருக்கிறது; வேறொன்றுமில்லை!

காங்: நீ ஒன்று; சட்டசபையில் பேசியிருக்கிறாரப்பா; சட்டசபையில்!

தி. மு. க: ரொம்ப ஆச்சரியம் தான்! என்ன பேசியிருக்கிறார்?

காங்: பேசி இருக்கிறார் என்றா சொன்னேன்? தவறு; தவறு! பொரிந்து தள்ளியிருக்கிறார்! "எல்லாவற்றுக்குமே டெல்லியை நம்பிக்கொண்டிருப்பதாக தி. மு. க. வினர் பழைய பல்லவியையே திரும்பப் பாடினார்கள். அரசியலமைப்புச் சட்டப்படி சில விஷயங்களில், மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் வேண்டியிருக்கிறது!" என்று சொன்னார். இந்த சாதாரணமான உண்மையைக் கூடப் புரிந்துகொள்ளாமல் உங்கள் தலைவர்கள் பதினைந்து பேர் அங்கே போய் உட்கார்ந்து கொண்டார்களே; என்னப்பா பயன்?

தி. மு. க: அப்புறம் என்ன பேசினார்?

காங்: "எதற்கும் டெல்லியைக் குறை கூறாதீர்கள்! இந்த ராஜ்யம் சில திட்டங்கள் வேண்டாமென்றால், அந்தத் திட்டங்களை டெல்லி சுமத்துவது கிடையாது!" என்றும் சொன்னார்! உங்கட்சிக்காரர்களுக்கு ஏதாவது அரசியல் தெரிந்தால்தானே!

தி. மு. க: எங்களுக்கு அரசியல் தெரிவதும் தெரியாததும் அப்புறம் இருக்கட்டும்; உங்களுடைய கனம் அமைச்சருக்கு 'உண்மை' என்றால் என்னவென்று தெரியுமா?....

காங்: என்ன இப்படிக் கேட்கிறாய்? 'மகாத்மாகாந்தி' என்ற சொல்லிலேயே உண்மை, நேர்மை, அகிம்சை, இரக்கம், ஈகை—எல்லாமே அடங்கிவிட்டதே! அவரது சீடகோடிகளுக்கு உண்மை தெரியாதா என்று கேட்கிறாயே; இது என்ன விளையாட்டு!

தி. மு. க: விளையாட்டு அல்ல நண்பனே! உன்னைப்போன்றவர்கள் இன்னும் காங்கிரசிடம் உண்மை இருக்கிறது என நம்பிக்கொண்டிருக்கிறீர்களே—என்ற வேதனைதான்! உனக்குத் தெரியுமா; 'பொய்யைப் பலமுறை திருப்பித் திருப்பிச் சொன்னால் அது உண்மையாகிவிடும்' என்று ஒரு மேதை சொல்லியிருக்கிறாரே!

காங்: அதற்கென்ன இப்போது?

தி. மு. க: மேதைகளைப் பற்றி என்னிடம் ஏன் பேசுகிறாய்—என்கிறாயா? தவறுதான், அந்தப் பொன்மொழியைத் தான் இப்போது உங்கள் அமைச்சர் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்; அந்தோ பரிதாபம்! அதிலும் அவர் தோற்றுத்தான் போவார்!

காங்: என்ன சொல்கிறாய்? எங்கள் அமைச்சர் பொய் சொல்கிறாரா? ஜாக்கிரதையாகப் பேசு!

தி. மு. க: மன்னித்துவிடு! பொய் சொல்லவில்லை! கடந்த காலச் சம்பவங்களைக்குழி தோண்டிப் புதைக்கிறார்; உண்மையின் கற்பை அழிக்கிறார்! ஆமாம் தம்பி; அப்பட்டமான புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டு நீங்கள் எல்லாம் 'மனிதர்கள் தானா' என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார்.

காங்: உன் விருப்பம்போல் அடுக்கிக் கொண்டே போகிறாயே; விளக்கமாகத்தான் சொல்லேன்!

தி. மு. க: இந்த ராஜ்யம்—அதாவது....?

காங்: அதிலென்ன சந்தேகம்? நம்ம சென்னை ராஜ்யம்தான்!

தி. மு. க: ஆமாம்; "சென்னை ராஜ்யம் சில திட்டங்கள் வேண்டாமென்றால், அவை டெல்லியால் சுமத்தப்படுவதில்லை" என்று சொன்னார் அல்லவா?

காங்: ஆமாம்; நமது அமைச்சர்களுக்கு ஏதேனும் விருப்பமில்லை என்றால், அதில் டெல்லி பிடிவாதம் பிடிப்பதில்லைதான்!

தி. மு. க: அதைத்தான் பொய் என்கிறேன்! நாங்களென்ன நடந்துபோன சம்பவங்களை நெஞ்சத்திலேயிருந்து அழித்து விடுபவர்களா? அல்லது நிகழ்காலத்தின் நேற்றைய ஏடுகளைக்கூட கரையானுக்கு உணவாக்கி விடுபவர்களா? கேள், நண்பனே! 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு டெல்லி ஒதுக்கிய தொகை போதாது; இதோ எங்கள் திட்டங்கள்; இத்தனை கோடி அவசியம் தேவைதான்!' என்று 'இல்லாத' மீசையை முறுக்கிக் கொண்டு டெல்லிக்கு ஓடினார்களே; என்ன ஆயிற்று?

காங்: நான் மறந்து விட்டேனே! அது என்ன; 1945-ல் நடந்ததா?

தி. மு. க: அப்போது வெள்ளைக்காரன் அரசு அல்லவா நடந்தது! நான் சொல்வது 1956-ல் அதிகப் பணங்கொடு—என்று ஓடியவர்கள் நெற்றியிலே 'நாமம்' பெற்றுத் திரும்பி வந்தார்கள்! நாடே அன்று 'இவ்வளவுதான் உங்கள் தைரியமா?' என்று முகம் சுளித்ததே; அதை நீங்கள் மறந்திருப்பீர்கள்; நாடு மறக்கவில்லை! இதுதான் சென்னையின் குரலை டெல்லி மதிக்கிற அழகா?

காங்: அது ஒன்றை மட்டும் சொல்லி, உங்களுடைய 'பல்லவி'க்கு வக்காலத்து வாங்கிக் கொள்ளமுடியும் என்று நினைக்கிறாயா?

தி. மு. க: இல்லை நண்பனே! இன்னும் உண்டு ஆதாரங்கள், "செங்கோட்டை சென்னைக்குத் தான் சொந்தமானது; தேவிகுளம், பீர்மேட்டை கேரளத்துடன் சேர்க்கவிட மாட்டோம்" என்று சொல்லிக் கொண்டு டெல்லிக்குப் போனார்களே, உங்கள் பக்தவத்சலம் உள்ளிட்ட மூன்று அமைச்சர்கள்? என்ன ஆயிற்று? இப்பொழுது செங்கோட்டை எங்கே? தேவிகுளத்தை எங்கே தேடுவது? பீர்மேட்டை பறிகொடுத்தவர்களா, இன்று சென்னையை எதிர்த்து டெல்லி திட்டங்கள் தீட்டாது என்று சொல்கிறார்கள்?

காங்: அது.... அது....

தி. மு. க: அதுமட்டுமல்ல என அறியாத நண்பனே! "டெல்லி ஏற்பாடு செய்த தென் உணவு மண்டல அமைப்பால் தீமைதான் விளைகிறது. அதுதான் இங்கு விலைவாசி உயர்வுக்குக் காரணம்; ஆகவே இந்த தென் உணவு மண்டல அமைப்பை சென்னை விரும்பவில்லை; அதை ஒழித்துத் தனி உணவுமண்டல அமைப்பை ஏற்படுத்தத்தான் வேண்டும்" என்று இரண்டு மாதங்களுக்கு முன்பு மார் தட்டினாரே; உணவு அமைச்சர் சுப்பிரமணியம்—நினைவிருக்கிறதா?

காங்: ஆமாம்!

தி. மு. க: டெல்லிக்கு வீராப்போடு சென்ற அவர் தலைகுனிந்து திரும்பி வந்தாரே; தெரியுமா?

காங்: ஆமாம்!

தி. மு. க: இப்படி மூக்கறுபட்டு, டெல்லியால் மூலையில் ஒதுக்கப்பட்ட சென்னை அமைச்சரவையில் ஒரு அங்கம்தான் இப்போது சட்டசபையில் பேசிய பக்தவத்சலனார் என்பது தெரியுமா?

காங்: ஆமாம்!

தி. மு. க: இப்படிக் கோரிக்கைகள் பலவற்றைக் குப்பை மேட்டிலே வீசி எறிகிறது டெல்லி! வெட்கங்கெட்டவர்கள் — சொல்வதைக் கேட்டு திரும்புவார்கள் என்று மமதை கொண்டிருக்கிறது டெல்லி! அதைத் தி. மு. கழகம் எடுத்துச் சொல்வது குற்றமா?.... அதை பழைய பல்லவி என்று உங்கள் பக்தவத்சலனார் கரகரத்த தொனியிலே பேசுவது தான் முறையா? பலமுறை பல் உடைந்தும், டெல்லி எந்தத் திட்டத்தையும் விருப்பத்திற்கு மாறாகத் திணிக்காது என்று சொல்வது உண்மையா? பச்சைப் பொய் அல்லவா?... அடடே!... நில் நண்பா எங்கே ஓடுகிறாய்?

விற்பனைக்குத் தயார்!

புத்தம் புது முறையில்—தமிழ்ப் புவனம் வியக்கும் வகையில்

பொங்கல் வாழ்த்துக்கள்

[தென்னகத் தலைவர்களின் வண்ண ஓவியங்களுடன் ஒன்பது விதங்களில் வெளிவந்திருக்கின்றன. தேவைக்கு 25 சதவீதம் முன்பணம் அனுப்பி வைத்து 'ஆர்டர்' அனுப்ப வேண்டுகிறோம். எல்லா விதங்களிலும் மாதிரிகள் பெற விரும்புவோர் ரூபாய் ஒன்று 1 மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.]

கிடைக்குமிடம்: : முத்துவேல் பதிப்பகம்.

77, மதுரை ரோடு. திருச்சி—8.

சென்ற இதழில்...

கரிகாலனைப் பழி தீர்க்க வந்த பெருந்தேவி அரண்மனைக்குள் எப்படி நுழைவது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில் அரண்மனைக்குள்ளிருந்தோர் பரபரப்படைந்திருந்தனர். வரவேற்பு அலங்காரங்களில் ஈடுபட்டிருந்தனர். 'தமிழ் காக்கும் தங்கமே வருக'—என்று முழங்கிடத் தயாராய் இருந்தனர்.

கடியலூர் உருத்திரங் கண்ணனாரை வரவேற்றிடத்தான் இத்தனை ஆர்ப்பாட்டங்கள். கரிகாலனின் புகழ்பாடும் பட்டினப் பாலை—எனும் நூலின் ஆசிரியர் அவர். அந்த நூலை இயற்றிய அவருக்கு பதினாறு நூறாயிரம் கழஞ்சு பொன் பரிசு வழங்கிடும் விழாவைத்தான் இவ்வளவு விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

புலவர் வந்து கொண்டிருந்தார், சிவிகை ஒன்றில். அரண்மனைப் பெருங் கதவுகள் திறக்கப்பட்டன. பெருந்தேவி உள்ளே நுழைய முயற்சிக்காமல் வெளியிலேயே அதிக தொலைவில் போய்த் தன் குதிரையுடன் மறைந்திருந்து கவனித்துக் கொண்டேயிருந்தாள். புலவரின் சிவிகை உள்ளே நுழைந்தது.

சிவிகையில் உட்கார்ந்திருந்த புலவர் தன் பாடலைத் திரும்பத் திரும்பப் படித்துத் திருத்திக் கொண்டு சென்றார்.

புலவர் போனவுடன், பின்னால் வந்த குதிரை வீரர்களுடன் கலந்து கொண்டு, உள்ளே சென்றாள் பெருந்தேவி. அரண்மனைக்குள் சென்றதும் குதிரையை ஒரு தூணில் கட்டி விட்டு பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டாள்.

புலவரை வரவேற்று, ஆசனத்தில் அமர்த்தினான் கரிகாலன். புலவர் கூட்டத்தில் விழிகளையோட்டி ஏமாந்த உருத்திரங் கண்ணனார் காரிக்கண்ணனாரைப் பற்றி விசாரித்தார். அவர் மதுரைக்குப் போயிருக்கிறார் என்று பொய் கூறி மழுப்பினான். சபையிலே புலவருக்கும் காவலனுக்கும் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், கரிகாலனை வீழ்த்த சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள் பெருந்தேவி.

29. பெருந்தேவியின் முடிவு

கடியலூர்ப் புலவர் அமர்வதற்கென அமைக்கப்பட்டிருந்த அழகான இருக்கையில் அவரை அமரச்செய்துவிட்டு, மன்னன் தன் இருக்கைக்குச் சென்றான். தேன் தமிழ் பெருக்கெடுத்தோடப் போவதை எண்ணி மகிழ்ந்தவாறு அவையோர் வீற்றிருந்தனர்.

கரிகாலனின் விருப்பப்படி பூம்புகார் மாளிகையில் தங்கியிருந்த பாண்டிய நாட்டுத் தளபதி நெடுமாறன் கொலு மண்டபத்தில் நுழைந்து மன்னனுக்கும் புலவருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு அமர்ந்தான். கரிகாலன் உருத்திரங்கண்ணனாருக்கு நெடுமாறனை அறிமுகம் செய்துவைத்தான்.

உடனே புலவர், பாண்டியன் பெருவழுதியின் நலன்கள் பற்றி அக்கரையுடன் நெடுமாறனிடம் விசாரித்தறிந்து மகிழ்ந்தார். அதன் பின்னர் கரிகாலன் அவையிற் குழுமியிருந்தவர்களை நோக்கிப் பின்வருமாறு உரையாற்றினான்.

"அன்புக் குடிமக்களே! அவைப் புலவர்களே! நாடு காக்கும் நல்லவர்களே! இன்று நமக்கெல்லாம் ஒரு திருநாள். நமது சோழ மண்டலத்து வரலாற்றில் ஒரு பொன்னேடு சேர்க்கப்படுகிறது இன்று. தமிழ்த் தாயின் செல்வங்கள் நாம். தமிழால் வளர்க்கப்படுகிறவர்கள் நாம். நமது அருமைத்தாயை அன்புடன் பேணி வளத்துடன் வாழவைக்க வேண்டிய கடமைக்குரியவர் நாம் என்பதை உணர்ந்திருக்கிறோம். தாய்மொழிப் பற்றில்லாதவன் என்னதான் உலகத்தில் மேன்மையுடனும் புகழுடனும் வாழ்கிறான் என்று கூறினாலும் அந்தப் புகழும் மேன்மையும் குருடன் கையில் இருக்கும் விளக்கைப் போன்றுதான் என்பதை மறந்துவிடக் கூடாது. நாம், நமது மொழியை—நாட்டை—கலையை—நமது மக்களை நேசிக்கிறோம். நமது உரிமை உணர்ச்சிகளை அழிக்க எத்துணை வல்லமை வாய்ந்த எதிரிகளாலும் முடியாது. நல்ல திடசித்தத்தையும் உறுதிப்பாட்டையும் நமக்கு அளித்தவள் நமது தமிழன்னைதான்! எவ்வளவு இடர்பாடுகள் இடுக்கண்கள் வந்துற்றாலும் தமிழ்த்தாயின் குளிர்ந்த முகத்தைக் கண்டு அவள் அரவணைப்பின் சுகம் பெற்று எல்லா வேதனைகளையும் மறந்துவிடுகிறோம். இப்போது நான் அமைதியான உள்ளத்தோடு இல்லை. என் நெஞ்சில் அடித்துக்கொண்டிருக்கிற புயலின் வேகத்தை யாராலும் உணர்ந்துகொள்ள இயலாது. ஆனால் என் அமைதியற்ற இதயத்துக்கு அமைதி வழங்கும் தாய், இதோ வந்திருக்கிறாள். ஆமாம்—உருத்திரங்கண்ணனார் உருவத்திலே என் தமிழன்னை வந்திருக்கிறாள். அவள் என் கவலையைப் போக்குவாளாக! என் துயரங்களுக்கு ஆறுதல் அளிப்பாளாக! சோழ மண்ணின் பெருமைகளைப் பற்றி வீறுகொண்ட தமிழில் பாப்புனையக் காத்திருக்கிறார் நமது பைந்தமிழ்க் காவலராம் கடியலூர்ப் புலவர் பெருந்தகை உருத்திரங்கண்ணனார். அந்த நல்லார் இப்போது தமிழன்னைக்கு முத்தாரம் அணிவிப்பார். அதனைக் கண்டு கேட்டு நாமெல்லாம் புதிய வலிவும் பொலிவும் பெறுவோமாக!"

—எனக் கூறி மன்னன் நிறுத்தியதும் கொலு மண்டபம் அதிரும் வகையில் "கரிகால் பெருவளத்தார் வாழ்க!" "கடியலூரார் வாழ்க!" என்ற முழக்கம் எழுந்தது. உருத்திரங்கண்ணனார், கையிலுள்ள சுவடியைப் பிரித்துக் கவிதை மழை பொழியத் தொடங்கினார்.

"வசையில்புகழ் வயங்கு
வெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும்
தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து
பொன்கொழிக்கும்"

—என ஆரம்பித்துத் தமிழ் முழக்கம் செய்தார்.

வட திசைக் கண் நில்லாமல் வெள்ளி மீன், திசை மாறி தென் திசைக்குப் போயினும், வானம்பாடி மழைத்துளி தாருது வருந்துகிற அளவுக்கு வானம் பொய்த்துவிட்டாலும் காவிரியாறு, தான் பொய்க்காமல் சோழ நாட்டுக் கரையில் பொன் துகள்களை ஒதுக்குகிற அளவுக்குப் பெருக்கெடுத்து ஓடுகிறதாம்.

இந்தப் பொருள் செறிந்த கவிதை வரிகளைக் கேட்டு அவைக்களம் அசையாத சிலையின் நிலை பெற்றது. முந்நூறு முத்தமிழ் வரிகளைப் பாடி முடித்தார் உருத்திரங் கண்ணனார்.

அத்தனையும் பழச்சுளை — நிலா ஒளி — பனி மலர்க் குவியல் — மொத்தத்தில் தேனருவி!

கரிகாலன், தன்னை மறந்து அமர்ந்திருந்தான். தமிழ் மாதாவின் அன்புக் கரங்களில் முகத்தைப் பதித்துக் கொண்டிருந்த உணர்வு அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

சோணாட்டில் சோறுவடித்த கஞ்சி, தெருவில் ஆறாக ஓடுகிறது. அங்கே காளைகள் ஒன்றோடொன்று போரிட்டு அந்த இடம் சேறாகிறது. அந்தச் சேற்றிலே தேர்கள் ஓடி ஓடி சேறு, துகளாய் மாறி, அந்த அழுக்குத் தூசிகள் வெள்ளிய அரண்மனைகளில் பரவி அக் கோட்டைகள்

என்ன பதில் ஐயா?

'தெற்கு உணவு மண்டலத்தைப் பிரிப்போம். தஞ்சாவூர் அரிசி தமிழ் பேசுவோர் சட்டிக்கே போகும்; இது உறுதி!'—என்று மார்தட்டி, வீராப்புப் பேசினார் ஜார்ஜ் கோட்டை மந்திரி.

'யார் சொன்னது; தெற்கு உணவு மண்டலத்தை பிரிக்கக் கூடாது; பிரிக்க முடியாது!'—என்று அதிகாரக் குரல் எழுப்புகிறார் செங்கோட்டை மந்திரி.

சென்னை ஜார்ஜ் கோட்டையே! டில்லி செங்கோட்டையின் குரலுக்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்?

புழுதியைப் பூசிக் கொண்ட யானைகள் போலக் காட்சி தருகின்றன.

— இப்படி சோழ நாட்டுச் சிறப்பை வர்ணிக்கும்போது யார் நெஞ்சில்தான் இன்பம் சுரக்காமல் இருக்கும்? கரிகால் மன்னனைப் போலவே அவையிலிருந்த அனைவரும் பூரிப்பு தாங்கமாட்டாமல் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினர். வேளிர்குல அரசி பெருந்தேவியின் காதுகளில் அந்த இன்பத் தமிழ் முழக்கம் கேட்கவில்லை. அவள் கவனமெல்லாம் தன் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக்கொள்ள எப்போது சமயம் கிடைக்கும் என்பதில்தான் இருந்தது.

சேலையின் மறைவில் ஒளித்தவாறு வைத்திருந்த கட்டாரியின் பிடியைத் தளர்த்தாமலே அவள் நேரம் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளை யாரும் கவனிக்கவில்லை. எல்லோருடைய கண்களும் காதுகளும் கடியலூர்ப் புலவரின் பக்கமே திரும்பியிருந்தன.

தமிழ் வளர்க்கும் சோழனைக் கொல்வதற்குத் தனக்குத் தமிழே துணை புரிகிறது என்று எண்ணிக் கொண்டாள் பெருந்தேவி. யாரும் அவளைக் கவனிக்கவில்லையென்பது உண்மைதான் என்றாலும் அவளையுமறியாமல் இரண்டு கூர்மையான விழிகள் கொலு மண்டபத்தின் ஒரு மூலையிலிருந்து அவள் பக்கம் ஊடுருவிப் பாய்ந்துகொண்டிருந்தன. அந்த விழிகளில் தேங்கியிருந்த ஆவலை — பரபரப்பை — அவசரத்தை — அச்சத்தை —வர்ணிப்பதென்றால் பட்டினப்பாலை பாடிய கடியலூர்ப் புலவராலும் இயலுமா என்பது சற்று ஐயத்திற்கிடமானது தான்!

அந்த விழிகளுக்குரிய உருவம் நகர்ந்து நகர்ந்து கொலு மண்டபத்து உட் பகுதிக்கு வந்துகொண்டிருந்தது.

வேளூர் அரசியும் தான் முதலில் உட்கார்ந்த இடம் வசதியானது அல்ல என்பதை உணர்ந்து மெது மெதுவாக அரசனின் ஆசனத்திற்கு அருகாமையில் உள்ள இடம் நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

இதற்குள்ளாக உருத்திரங் கண்ணனார் பட்டினப்பாலையைப் பாடி முடித்துச் சுவடியைக் கொண்டு போய்க் கரிகால் மன்னனிடம் அளித்தார். மண்டபம் முழுதும் மலர் மாரி பொழிந்தது. சுவடியை வாங்கித் தக்க இடத்தில் வைத்துவிட்டு அரசன், அமைச்சரிடம் குறிப்பாக ஏதோ கூறவே அவர் தளபதியை நோக்கிக் கையை அசைத்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஐந்தாறு ஆட்கள் தூக்க முடியாமல் திணறியவாறு வெள்ளிப் பேழைகள் சிலவற்றைத் தூக்கி வந்து மண்டபத்தின நடுவே வைத்தனர். அரசன் எழுந்து, புலவரை நோக்கிக் கரங்குவித்தவாறு பேசலானான.

"கவியரசே! என்னையும் எனது நாட்டினையும் புகழ்ந்து பாடித் தென்னகத்து வரலாற்றில் அழியாத இடத்தினை அளித்துவிட்டீர்கள். தமிழ்த்தாயின் அழகுக்கு அழகு செய்திருக்கிறீர்கள். தங்கட்கு நானும் இந்த நாடும் என்றென்றும் கடமைபபட்டிருக்கிறோம். சோழ நாட்டின் அன்புப் பரிசாக இந்த வெள்ளிப் பேழைகளிலுள்ள பதினாறு நூறாயிரம் கழஞ்சு பொன்னையும் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்."

—எனக்கூறி, பேழைகளைத் திறக்கச் செய்து பொன்னை அள்ளிப் புலவர் பெருமானின் தலையில் மலர் போலத் தூவினான். அவையிலுள்ள தலைமை அலுவலாளர்களும், புலவர் பெருமக்களும் பேழைகளிலுள்ள பொன்னை அள்ளி அள்ளி உருத்திரங் கண்ணனாரின் மேலே கொட்டி மகிழ்ந்தனர்.

அந்த ஆரவாரத்தைக் கண்ட பெருந்தேவி, இதுதான் தக்க தருணமென்று தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள எழுந்தாள். அவள் இலக்குக்கு நேராகக் கரிகாலன் நின்றுகொண்டிருந்தான். கட்டாரியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பலங்கொண்டமட்டும் தன் கரத்தைப் பின்னுக்குத் தூக்கி வீசியெறிய முயன்றாள்.

அவள் கரம் நடுங்கிற்று. உடல் ஆடிற்று.

கண்கள் இருண்டன.

அவளைப்பற்றியிருந்த பிணி எங்கேயோ பறந்துவிட்டது.

"ஒரே வீச்சு! மன்னன் ஒழிந்தான்!" இப்படி அவளால் ஆத்திரத்தோடு நினைக்க முடிந்தது.

ஆனால் ஏதோ ஒரு திகில் அவள் அடிவயிற்றிலிருந்து கனல்போலக் கொழுந்துவிட்டுக் கிளம்பி நாக்கு வரையில் சூடேற்றிக்கொண்டிருந்தது.

"இனியும் தயங்கிப் பயனில்லை!"

அவள் உள்ளம் எச்சரிக்கிறது.

ஆனால் அவள் செயலிழந்துவிட்டாள். எப்படி?

கூடாது! கூடாது! எல்லா வலிவினையும் ஒன்று சேர்த்து ஒரே வீச்சில் தன் காரியத்தை வெற்றிகரமாக முடித்துவிடவேண்டும்—என உறுதிகொண்டுவிட்டாள் இப்போது!

தணிந்த கை மீண்டும் உயர்ந்தது. பலமனைத்தும் கரத்தில் குவிந்தது. ஓங்கினாள் வேகமாக! வீசிவிட்டாள் கட்டாரியை!

அய்யோ கரிகாலன் மார்புக்கு நேரே கட்டாரி பாயப்போகிறது! ஆனால் — அதற்குள் அங்கே குறுக்கே பாய்ந்தது யார்? கொலுமண்டபத்தில் ஒரே குழப்பம். கரிகாலன் திடுக்கிட்டான். திகைத்தான். பெருந்தேவியைச் சில பெண்கள் பிடித்துக்கொண்டார்கள்.

கரிகாலனின் உயிரைக் காப்பாற்றுவதற்காகக் குறுக்கே பாய்ந்து தன் விலாப்புறத்தில் பலத்த காயத்துடன் கீழே விழுந்துவிட்ட அந்த மனிதனை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். அவன்தான கொலு மண்டபத்தில் பெருந்தேவியின் நடவடிக்கைகளை மிகத் தீவிரமாகக் கவனித்து வந்தவன். தோற்றத்திற்கு ஒரு வயதான உழவனைப் போலவே இருந்தான்.

மயக்கமுற்றுக் கிடந்த அவனை உடனே மருத்துவ சிகிச்சைகளுக்காக எடுத்துப்போக வேண்டுமென்று கரிகாலன் பரபரப்புடன் ஆணை பிறப்பித்தான். அந்த உழவனை வீரர்கள் அவசர அவசரமாகத் தூக்கிக்கொண்டு கிளம்பினர்.

தூக்கும்போது கண்விழித்த அந்த உழவன், பெருந்தேவி நின்றிருந்த திசையை நோக்கியவாறு "அவள்! அவள்! அவள்......" என்று கத்தினான்.

அப்படி அவன் கத்திக்கொண்டிருக்கும்போதே பெண்களின் பிடியிலிருந்த பெருந்தேவி கீழே சாய்ந்தாள். தன் இலக்கு தவறிவிட்டது. யாரோ ஒருவன் தன் லட்சியத்தைத் தடுத்துவிட்டான். தன் முயற்சியத்தனையும் முறிந்து போய் பாழாகிவிட்டது என்பதை ஒரு நொடியில் உணர்ந்துகொண்டாள் வேளிர் குல அரசி. அந்த உணர்வுக்குப் பிறகு அவள் உயிர் உடலில் தங்கவில்லை. முட்டி மோதிக்கொண்டு வெளிப்பட்டு அவளது கடைசி மூச்சு, காற்றுடன் கலந்துவிட்டது. இனி அவளுடைய மூச்சு காற்றுடன் கலக்க வழியில்லை. இனி மண்ணுக்குத்தான் அவள் தீனி.

அய்யோ பரிதாபம்! வேளிர் குல அரசியின் வேதனைகள் கடைசி வரையில் தீரவில்லை. தன் கணவனின் சந்தோஷத்திற்காக அவள் செய்யத் துணிந்த காரியமும் படுதோல்வி அடைந்துவிட்டது. எங்கேயோ பிறந்து, எங்கேயோ வாழ்ந்து, எங்கேயோ எதிரியின் மாளிகைக் கொலு மண்டபத்தில் அந்தப் பெருமைக்குரிய அரசியின் பிணம் கிடந்தது!

கரிகாலன் அந்தச் சவத்தின் அருகே வந்து நின்றான். அனைவரும் சூழ்ந்து நின்று பிணத்தின் முகத்தை உற்று உற்றுப் பார்த்தனர்

இருங்கோவேளின் மனைவி பெருந்தேவிதான் அரசனைக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டுப் பிணமாகி விட்டாள் என்ற உண்மை உறுதிப்படுத்தப்பட்டது.

கரிகாலன் மரம்போல் நின்றுகொண்டிருந்தான். பெருந்தேவியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அம் மண்டபத்திலே மயான அமைதி நிலவிற்று.

இறுதியாக அமைச்சரைப் பார்த்து, "சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்படட்டும். நான் போய் அந்த உழவனைக் கவனிக்கிறேன்." என்று கூறிவிட்டு கொலு மண்டபத்திலிருந்து கரிகாலன வெளியேறினான்.

தானைத் தலைவர்களும் வீரர்களும் மன்னனுக்குப் பாதுகாப்பு அளிக்கச் சூழ்ந்துகொண்டு பின் தொடர்ந்தனர்.

(தொடரும்)

நாவீறு படைத்த நாவலர் மறைவு

பொதுச்செயலாளர் பரிவு

"இன்றையத் தமிழகத்தின் முதுபெரும் புலவர்களில் முதல்வராக வைத்து எண்ணப்பட்டும் பாராட்டப்பட்டும் வந்தவரும், நாவீறு படைத்த நாவலர் என்று தமிழ்ப் பெருங்குடி மக்களால் போற்றப்பட்டு வந்தவரும் ஆன பேரறிஞர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் இயற்கை எய்திய துக்கச்செய்தி கேட்டு ஆற்றொணாத் துயருற்றேன்.

"அவரது இழப்பு தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஈடு செய்யமுடியாத பேரிழப்பேயாகும். நாவலர் பாரதியார் அவர்களின் மறைவால் தமிழ்கூறும் நல்லுலகம் ஒரு தமிழ்ப் பெரும் புலவரை, ஒரு பெரும் தமிழ்ப் பேராசிரியரை, நாவீறுபடைத்த ஒரு பெருஞ் சொற்பொழிவாளரை, அஞ்சாநெஞ்சத்துடன் உண்மைக்காக வாதாடும் ஒரு பெரும் வழக்கறிஞரை, தாய்மொழிக்காகவும் தாய்நாட்டுக்காகவும் பாடுபட்ட ஒரு பெரும் விடுதலை வீரரை இழந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

"அவர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து ஆற்றிய அரும்பணிகளும் இந்தியத் துணைக்கண்ட விடுதலைப் போராட்டக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு செய்த தொண்டுகளும், நல்ல தமிழ் மணங்கமழுமாறு எழுதித் தந்துள்ள இலக்கிய நூல்களும், அவர் ஆற்றிய ஆணித்தரமான வீரஞ்செறிந்த சொற்பொழிவுகளும், தாய்மொழி தமிழைக் காக்க இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய திறனும், தமிழர்க்குப் பகையானவர்களை எதிர்த்து நின்ற வீரமும் யாராலும் மறக்கக்கூடியன அல்லவாகும்.

"அவரதுதோற்றம்—கருத்து—எழுத்து—சொல்–செயல் ஆகிய எல்லாம் வீரஞ்செறிந்தனவாகும்.

"இப்படிப்பட்ட நாவலர் பாரதியாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் ஆழ்ந்த பரிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்,
15—12—59.

'கம்பச் சித்திரம்'!

கவர்னர் பெருமான் ஒத்துக்கொண்டார், தம் 'ஆட்சி'யிலுள்ளதை! 'அவர் வரைந்த சித்திரத்தில் கறும் புள்ளி விழுந்துவிட்டதாம். கறும்புள்ளி என்று 'அவர் குறிப்பிடுவது விலைவாசி ஏற்றத்தைத் தான்!

அமைச்சர்கள், விலைவாசி ஏறவில்லையென்றும்—ஏறியது உண்மையென்றாலும் அப்படி ஒன்றும் பிரமாதமாக ஏறிவிடவில்லை —என்றும் ஆளுக்கொரு விதமாய் பேசியதை மறுத்து விலைவாசி ஏறியது உண்மை; காமராசர் தலைமையில் பலர்கூடி எழுதிய 'கம்பச் சித்திரத்தில் கறும்புள்ளி' விழுந்துவிட்டது உண்மை!' என்று கூறியிருக்கிறார்.

அடுத்தபடி, 'உணவு விலையேற்றத்தால் நிலத்தில் பாடுபடுவோருக்கு உடனடி நன்மை கிடைக்கும். ஆனால் நகர்ப்புறத்தில் வசிப்பவர்களுக்கு இதனால் பாதகம் ஏற்படும்'—என்று குறிப்பிட்டார்.

உணவு விலையேற்றத்தால் நிலத்தில் பாடுபடுகின்ற ஏழை உழவர்களுக்கு உடனடி நன்மை கிடைக்கிறதா? இல்லை! பெரும் நில முதலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும்தானே விலையேற்றத்தால் இலாபம் கிட்டும்?

இன்னமும் உழவர்கள் சரியான நீதி கிடைக்கவில்லை என்று போராடுகின்ற செய்தியைத் தானே நாம் கேட்கிறோம். ஏழை நிலச் சொந்தக்காரர்களிடம் பழைய விலையில்தானே கொள்முதல் செய்கிறான் வியாபாரி?

நிலை இப்படியிருக்க, விலைவாசி ஏற்றத்தால் நிலத்தில் பாடுபடுபவர்களுக்கு நன்மை என்று கூறுவது பொருந்துமா?

ஊராள வந்த...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

களை விரும்பி எந்தவிதக்கிளர்ச்சியும் செய்வதில்லை. இப்படிப்பட்ட நிலைமை சுமுகமாக தொடர்ந்து இருந்து வருவதற்கு மூன்று காரணங்களைச் சொல்லலாம். தொழிற் புரட்சி மலர்ந்த நேரத்தில் நிலப்பிரபுக்கள் தங்களிடமிருந்த செல்வங்களை தொழிலில் ஈடுபடுத்தி நாட்டு வளத்தைப் பெருக்கியதுடன் இதுநாள்வரை விவசாய நிலைமைகளை நன்குணர்ந்த நல்லவர்களாக நிலப்பிரபுக்கள் இருந்து வருவது. இரண்டாவதாக விவசாயிகள் விரும்பாததுடன், குடும்பத் தேவைகளை நிவர்த்திக்க மட்டுமில்லாமல் வியாபாரக் கண்ணோட்டத்துடன் விவசாயத்தைத் தொழில் முறையில் நடத்துவதால் நிலப் பிரபுத்துவத்துக்கு எதிர்ப்பில்லை. கடைசியாக விவசாயத்தைவிட தொழில் துறை அதிக அளவில் பயன்கள் நல்குவதால் விவசாயத்தில் ஈடுபட்டு சிரத்தை காட்டுவோர் குறைவு. எனவேதான், இங்கிலாந்தின் நிலக் கொள்கையை விவசாய நாடுகள் பின்பற்றுவதுமில்லை. எந்த முறையான விவசாய சீர்திருத்த நிபுணர்களும் அதைப் பின்பற்றவேண்டுமென்று யோசனைகள் கூறுவதுமில்லை.

இவ்வளவு பிற்போக்கான, வேறு நாடுகளுக்கு ஒத்துவராத விவசாய நிலைமை இருந்தாலும் சாகுபடிதாரர்கள் பாதுகாப்புக்கான சட்டங்கள் பல இங்கிலாந்தில் உள்ளன. 1875ல் விவசாய நில உடைமைகள் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்திற்கு முன்னரே, சாகுபடிதாரர்களின் நலன்களை, நன்மைகளைப் பாதுகாக்க சில சட்டங்கள் நிறைவேறியுள்ளன். 1875-ம் ஆண்டு சட்டப்படி சாகுபடிதாரர் சாகுபடி நிலத்தில் அபிவிருத்தி செய்தமைக்கு அவர் நிலப் பிரபுவால் வெளியேற்றப்படும் பொழுது நட்ட ஈடுபெற உரிமையுண்டு. நில அபிவிருத்தியை நிர்ணயிக்கையில் அது மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டது. 20 ஆண்டு காலத்தில் மதிப்பற்றுப் போகும் கட்டிடங்கள்—பாசன வசதிகள் போன்ற நிரந்தர அபிவிருத்தி—7 ஆண்டுகளில் மதிப்பற்றுப் போகும் மண்வளம் பெருக்குதல் போன்ற ஓரளவு நில அபிவிருத்தி—2 ஆண்டு காலத்தில் மதிப்பற்றுப் போகும் எருவிடுதல் போன்ற அபிவிருத்தி என்று அப் பிரிவுகள் வகைப்படுத்தப்பட்டன. இப்படிப்பட்ட நட்ட ஈடுகளைப் பெறுவதற்கு வகையில்லாமல், நிலப் பிரபுக்கள் நிலம் தருகையில் சாகுபடிதாரரிடம் எழுதி வாங்கிக் கொள்ள சட்டம் அனுமதி அளித்துள்ளது. எனவே, இவ்விதியின்படி சாகுபடிதாரர்கள் எவ்வித நட்ட ஈட்டையும் பெற முடியாமல் பலவீனப்படுத்தப் பட்டுவிட்டனர்.

1833-ல் வெளியான சட்டம் கட்டாயமாக நட்டஈடு தர வழி செய்து மேற்கண்ட பலவீனத்தைக் களைந்தது. மேலும், 20 ஆண்டுகளில், 7 ஆண்டுகளில், 2 ஆண்டுகளில் செலவழித்தது மதிப்பிழக்கும் என்ற அடிப்படை மாறி, புதிதாக வருகின்ற சாகுபடிதாரனுக்கு நிலத்தை அபிவிருத்தி செய்ய என்ன செலவாகுமோ அந்தத் தொகை விலக்கப்படும். சாகுபடிதாரன் நட்ட ஈடாக பெற அச் சட்டம் வழி வகுத்தது. இந்த நட்ட ஈட்டுத் தொகையை சாகுபடிதாரரும் நிலப்பிரபுவும் ஒத்துக்கொண்டு நிர்ணயிக்க முடியவில்லையெனில், இருவரும் தேர்ந்தெடுத்த நடுவாளர், ஒவ்வொருவரும் நிர்ணயிக்கின்ற இருவர் ஆக மூவரும் நட்டஈட்டுத் தொகையை நிர்ணயிப்பர், இப்படி சாகுபடிதாரர் சாகுபடி நிலத்தில் தனக்குகந்த முறையில் நல்லபிவிருத்தி செய்ய வழி வகையும், விலகும்போது நட்ட ஈடு பெறவும் சட்டப்படி உரிமை இருந்ததால் சாகுபடிதாரர் தன் சக்தி அனைத்தும் பயன்படுத்தி விவசாய வளத்தைப் பெரிதும் வளர்க்க முடிந்தது. இந்த் 1883-ம் ஆண்டு சட்டமே நீண்ட நாட்கள் சிறு மாற்றங்களுடன் இங்கிலாந்தில் சட்டமாக இருந்தது.

1906-ம், ஆண்டில் மேற்சொன்ன சட்டத்திற்கு ஒரு திருத்தங் சேர்க்கப்பட்டது. சாகுபடிதாரருக்குரிய சாகுபடிக் காலம் காரணமில்லாமல் குறைக்கப்பட்டு, சாகுபடிக்குக் குந்தகம் நேரிடுமானால் நிலப் பிரபுவிடமிருந்து ஓராண்டு அல்லது இரண்டாண்டு குத்தகைத் தொகையை நட்டஈடாகப் பெற அத்திருத்தம் வசதியளித்தது.

1920-ல் இன்னும் ஒரு சட்டம் வந்தது. இச்சட்டப்படி, சாகுபடிதாரர் தன்னிச்சைப்படியே விலகினாலும் நிலப் பிரபுவிடமிருந்து நட்டஈடுபெற உரிமை ஏற்பட்டது. சாகுபடிப் பண்ணையை நவீன முறையில், அப் பகுதியில் நடைமுறையில் இல்லாத புது வகையில் வளமாக்கினால் சாகுபடிதாரருக்கு அந்த அபிவிருத்திக்காக சாகுபடிதாரர் உதவித் தொகை பெற சட்டம் வழி கண்டது. எனவே, நவீனக் கருவிகள், விஞ்ஞான முறைகள் விவசாயத்தில் கடைப்பிடிக்கப்பட இச் சட்டம் உற்சாகமளித்தது.

1923-ல் முன் சொன்ன சட்டங்களெல்லாம் ஒன்றாக இணைந்த விவசாய உடைமைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம்தான் தற்பொழுதும் அவ்வப்போதைய சிறு மாற்றங்களுடன் நடைமுறையில் இருந்து வருகின்றது.

சட்டங்கள், அத்துடன் தொடர்ந்து இருந்துவரும் நடைமுறைகள், நிலப்பிரபு—சாகுபடிதாரர் உறவை, சாகுபடிதாரர்களுக்கு சாதகமாக உருவாக்கியுள்ளன. வேறு நாடுகளில் இருப்பதைப்போல் அல்லாமல் நிலப்பிரபு, சாகுபடிதாரர்களுக்குள் சமுதாய மதிப்பில் கொஞ்சமும் இங்கிலாந்தில் வேற்றுமையில்லை. செல்வமும் வருமானமும் எவ்வகையில் அவைகள் சேருகின்றன என்பதைக் கவனியாமல் சமுதாய மதிப்பை தனி நபர்களுக்கு அளிக்கின்றன. அத்துடன் கல்வியும், சமுதாய பண்புகளும் சமுதாய மதிப்புக்கு காரணமாக அமைகின்றன. எனவே, சமத்துவம் அங்கு எந் நிலையிலும் திகழ வாய்ப்பிருக்கின்றது. எனவே, ஆண்டான் — அடிமைப் போராட்டமில்லை,

இந்த விவசாய நிலைமைகளைத் தவிர, நிலத்தைப் பொறுத்த வாரிசு பாத்தியதை இங்கிலாந்தில் தலைமகனுக்கு மட்டிலுமே உரியது வேறு குழந்தைகளுக்கு எவ்வித வாரிசு உரிமையும் நிலத்தில் இல்லை, தலைமகன் நிலத்தை வாரிசாகப் பெற ஏனைய உடன் பிறப்புகளுக்கு உதவித் தொகையாக ஏதும் தர வேண்டியதில்லை. எனவே, இங்கிலாந்தில் தலைமுறைக்குத் தலைமுறை நிலம் துண்டாகிவிடும் — சிறு நில உடைமைகள் சிறிய அளவில் உருவாகிவிடும் என்ற பயத்திற்கே வழி இல்லாமல் போய் விட்டது.

பிற்போக்கான கொள்கையில் இங்கிலாந்து நிலப் பிரச்சினையை தீர்த்துள்ளது. தன்னுடைய பொருளாதார அமைப்பில் மிகச் சிறியப் பங்கே விவசாயத்தில் இருந்தாலும், சர்க்கார் அதில் தலையிட்டு சில சட்டங்களை உருவாக்கியிருப்பது, பிற்போக்கு நிலையிலும் அவசியம் கருதி சர்க்கார் எதிலும் தலையிட்டு உரியது ஆற்றுவது கடமையாகும் என்பதை விவசாய நாடுகளுக்கு சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கின்றது.

★

போராட்டம்!

விசித்திரமான சேதி தான் என்றாலும் வீரக் கரு அதில் இருக்கிறது. திருச்சூரிலே நடைபெற்றது, ஒரு போராட்டம்! போராட்டத்தை நடத்தியவர்கள், 'பிச்சைக்காரர் விடுதி' — என்றபெரும்பேர் கொண்ட அந்த விடுதி அரசினரின் வசம் இருந்தது. ஆனால் அது கைமாறி நகராட்சியின் கைக்கு வந்தது.

நகராட்சியினர் உடனே அறிக்கை விட்டார்கள். 'பிச்சைக்காரர்களுக்குப் பிச்சைப் போடாதீர்கள். ஏனெனில் நாங்கள் பிச்சைக்காரர் விடுதி ஒன்று நடத்துகிறோம். அதில் பிச்சைக்காரரைத் திருத்த முயற்சி எடுக்கிறோம். இதை மீறிப் பிச்சை போட்டவர் பிச்சைக்காரர்களை வளர்ப்பவர்கள் ஆவார்கள்!'

இந்த அறிக்கையினைக் கண்ட பொதுமக்கள், பிச்சைக்காரரைக் கண்ட போதெல்லாம் விரட்டினர்! உடனே பிச்சைக்காரர் கூட்டம் கூடியது; உரிமைப் பேரிகை முழங்கியது.

'நியாயமா இது? நாங்கள் தொழுநோய்க்காரர்கள். பிச்சைக்காரர் விடுதியிலும் சேர்ப்பதில்லை. பிச்சையும் இடவேண்டாம் — என்று அறிக்கை விடுகிறீர். இது எந்த நியாய வகையைச் சேர்ந்தது? மருத்துவ விடுதியில் சேர்த்துக்கொள்ளுங்கள். அல்லது பிச்சை தரவேண்டாம் — என்ற அறிக்கையை வாபஸ் வாங்குங்கள்!' — இதுதான் பிச்சைக்காரர்களின் போர்ப் பிரகடனம்!

போர் முரசின் ஒலி கேட்டது! புறப்பட்டனர் வீரர்கள், திருவோடு தூக்கி! நகராட்சியை முற்றுகை போட்டார்கள்.

அதிகாரிகள் மிரட்டினர். பலிக்கவில்லை. கடைசியில் வீரர்களை லாரியில் ஏற்றிக் கொண்டுபோய் ஊர் கோடியில் விட்டுவரத் திட்டம் தீட்டினார்கள்,

அதன்படி வீரர்கள் சிறை பிடிக்கப்பட்டு, லாரியில் ஏற்றப்பட்டார்கள். ஊரைக் கடக்கும்போது டிரைவரை வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

'காரைத்திருப்பு: எங்களைத் திருச்சூர் கொண்டு போ!' கூச்சலிட்டார்கள் வீரர்கள். அவர்களின் பயங்கரமான கதறல் டிரைவரின் மனதைக் கலக்கியது இருந்தாலும் லாரியை நிறுத்தாது ஓட்டினான்.

'திருப்புகிறாயா; இல்லையா? திருப்பி ஓட்டாவிட்டால் கீழே குதிப்போம்; குதித்துயிர்விடுவோம்!'

—என்று கூறியவர்கள் குதிக்கவும் தயாராயினர். பீதிகொண்ட டிரைவர் லாரியைத் திருப்பிக்கொண்டு வந்தான், திருச்சூருக்கு! தொல்லை தீர்ந்தது — என்றிருந்த அதிகாரிகளுக்கு மறுபடியும் தலைவலி தொடங்கிற்று!

சுழல் விளக்கு

மாஜுமி

ரங்கசாமி; தென்னூர்.

(?) கவர்னர் ஒரு வட நாட்டவராக இருக்கக்கூடாது என்கிறீர்களா?

இல்லை. கவர்னர் பதவியே பொருளற்றது, பெரும்பொருள் விழுங்குவது, அதனுல் தேவையற்றது—என்கிறோம்,

இளமணி; கா. புதூர்.

(?) கோடைகாலத்திற்கு உதகமண்டலம் சென்ருர்கள்; வந்து கொண்டிருக்கும் குளிர்காலத்திற்கு எங்கே போவார்கள்?

சூரிய மண்டலப் பயணம் நடத்தினுலும் நடத்துவார்கள், தட்டிக்கேட்டு யார் வெற்றிபெற முடியும்—என்ற தைரியத்தில்!

சோலையன்; ராயபுரம்.

(?) கிருஷ்ணமேனன்—நேரு உறவு எப்படி இருக்கிறது?

அமெரிக்கத் தலைவர் ஐஸன்ஹோவரின் விருந்திற்கு 'அழைக்கப்படாத அளவுக்கு 'உறவு' வளர்ந்திருக்கிறது. கனம். கிருஷ்ணமேனன் -- சாதாரண கிருஷ்ணமேனனுக மாறும் காலத்தை எதிர்பார்ப்போமாக!

ராகவன்; அயன்புரம்.

(?) மனிதன் என்பான் யார்?

'மனிதத் தன்மை'—எனும் புத்தகத்தை முழுதும் கற்று, அறிந்து, அதன்படி நடப்பவன்!

ஊ. பழனிச்சாமி; கோட்டயம்.

(?) இந்திய ஆதிபத்யக் கடிவாளம் தெற்கே இருந்திருந்தால்.......?

இந்நேரம் வட மண்டலத்தில் போர் முரசு தட்டப்பட்டிருக்கும்; சதுரங்க சேனை அணிவகுத்திருக்கும்; விவேகிகளால் போர் வியூகங்கள் வகுக்கப்பட்டிருக்கும்; வடவர் ஒன்றுபட்டு விடுதலை கீதத்தை இசைந்திருப்பார்கள்.

நாதன்; சங்கனூர்.

(?) காமராசருக்கு சோசியத்தில் நம்பிக்கை உண்டா?

இல்லை; காரணம். அவரே ஒரு (தேர்தல்) சோசியர். அத்தோடு அருப்புக்கோட்டையில் காங்கிரஸ் வேரோடு சாய்ந்ததிலிருந்து இந்த 'வியாபாரமே வேண்டாம்' என்று நினைத்துக் கொண்டிருக்கிற, மவுசில்லாத சோசியர்.

சத்யபாமா; சேலம்.

(?) உலக சமாதானத்திற்கு இனி, நேருவின் பணி எத்தகையது?

இனிமேல் 'உலக சமாதானம்' எது? எல்லையில் சமாதானம் ஏற்படுத்துவதே அவருக்குத் தீராத பணி!

சுப்பிரமணியம்; புதுவை.

(?) விலைவாசி குறைப்பில் அரசாங்கத்தின் பங்கென்ன?

இப்போது மிக முக்கியமான—வாழ்க்கைக்கு மிகமிகத் தேவையான ஒரு பொருள் நியாய விலையில் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அது என்ன தெரியுமா? சூடம்!

அய்யாக்கண்ணு; மதுரை.

(?) ஐசன்ஹோவர் இந்தியா வந்து என்னென்ன தெரிந்து கொண்டார்?

கும்பிடத் தெரிந்துகொண்டார்; அவர் மருமகள் இந்திய நாட்டுக் கர்நாடகக் கிழவிகளைப்போல் நூல் நூற்கப் பழகிக்கொண்டார். ஆரத்தி எடுத்து, 'வயிற்று வலி எடுக்கும் வேதம்' ஓதி விருந்தினரை வரவேற்பது இந்'திய' வழக்கம் எனத் தெரிந்துகொண்டார்.

வடமலை; கல்லாவி.

(?) வரும் தேர்தலில் காமராசர் தோற்ருல் கவர்னர் பதவி கிடைக்குமா?

கவர்னர் பதவியென்ன; ஜனுதிபதி பதவியே கிடைக்கும், இதே மௌன விரதத்தைக் கடைப்பிடித்தால்!

இ. பி. பாட்சா; அவிநாசி.

(?) மேட்டூர் பேப்பர் உற்பத்தித் தொழிற்சாலைக்கு இந்திய சர்க்கார் அனுமதியைக் கோரியிருக்கிருர்களாமே?

இந்தச் செய்தியை நம் மதியூக மந்திரிகளுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். நியூஸ் பிரிண்ட் அல்லாத சாதாரண காகிதம் தயாரிக்கும் ஆலைக்குக்கூட வடவர்களின் அனுமதி கேட்கவேண்டியிருக்கிறது. இங்கிலையில் 'வடநாடு நம்மைத் தொழில் துறையில் ஈடுபடுவதைத் தடை செய்வதில்லை.'—என்று அமைச்சர்கள் வாய்ப்பறை கொட்டுகிருர்கள்.

சுரேந்திரன்; கெண்டையூர்.

(?) கிரிக்கெட்டில் ஏன் இந்தியா தோல்வியை பெரும்பாலும் தழுவிக் கொள்கிறது?

இவர்களின் ராஜதந்திரத்தைப் போலத்தானே அதுவும் இருக்கும்? கிரிக்கெட் மட்டுமல்ல, சீக்கியர்களின் தயவால் இருந்து வந்த ஹாக்கி விளையாட்டு வெற்றிகூட அண்மையில் மங்கிப்போயிற்றே!

சுந்தரேசன்; குன்னூர்.

(?) டென்சிங் போல் இப்போது கரம்சிங் பெயர் பத்திரிகைகளில் அடிபடுகிறதே; யார் அவர்?

இமாலயம் ஏறிப் புகழ்பெற்ருன் டென்சிங். இமாலயச் சாரலில் சீனர்களின் கொடுமைக்குள்ளாகி புகழ் பெறுகிருர். இந்த எல்லையோரத்துப் போலீஸ்காரர்!

வரதன்; பட்டுக்கோட்டை.

(?) கேரளாவில் பட்டம் தாணுப் பிள்ளை பதவி பெறுவாரா?

அதைப்பெற அவர் ஆலாய்ப் பறக்கிருர். 'தமிழர்களின் ரத்தம் மறுபடியும் உடைப்பெடுத்தோட கேரள மக்கள் விரும்புகிருர்களா—என்பதை வரும் தேர்தல்தான் நிர்ணயிக்கும்.

ஆராவமுதன்; மதுரை.

(?) மீனுகவும் மனிதனுகவும் தோன்றும் கடல் பிராணி ஒன்று கிடைத்திருக்கிறதாமே?

தேர்தல் நேரத்தில் மாடாகவும், எதிர்க்கட்சிகள் போராட்ட நேரத்தில் இரத்தப் பசி எடுத்த 'பிராணி'யாகவும் மாறும் அதிகார வர்க்க மனிதர்களைத்தான் நாம் தினம் தினம் கண்டு கொண்டிருக்கிருேமே?

ஆழ்வார்; சேலம்.

(?) புளி ஏற்றுமதிக்குத் தடை போட்டிருக்கிருர்களாமே?

இப்போதாவது படலம் நீங்கிற்றே அவர்கள் கண்களிலிருந்து! எதிர்க்கட்சிக்காரன் சொன்னதை வேண்டுமென்றே மறுக்கும் பண்பை மறந்து, பதுக்கல்காரர்களைப் பிடிக்கும் காலத்தை எதிர்பார்ப்போமாக!

பழனிச்சாமி; தாராபுரம்.

(?) கேரளாவில் தேர்தல் ஒரே நாளில் நடைபெறப் போகிறதாமே?

ஆம்; ஒரே நாளில் இருந்தால் தானே பணம் கொடுக்கும் வேலை சுலபமாக முடியும்?

சுந்தரன்; இலுப்பக்குடி.

(?) தென்னகத்தார் தூங்குகிருர்களா?

இல்லை, மயங்கிக் கிடக்கிருர்கள். "பாரத தேசியம்" — எனும் அந்த மயக்கத்தைப் போக்க 'தாயக உணர்ச்சி' எனும்மாற்று மருந்து தேவைப்படுகிறது!

சோலையப்பன்; நாகை.

(?) தமிழ்நாட்டுக் காங்கிரசின் கோட்டை எது?

ஆலைகள் நிரம்பிய கோவை மாவட்டம். கோட்டை மட்டுமல்ல, தேர்தல் போர்க் கருவியான பணம் தரும் ஆயுதசாலையும் அதுதான்.

சோமு; ராயநல்லூர்.

(?) சுதந்திரா கட்சி டில்லிப் பீடத்தைக் கைப்பற்றினுல்....?

குலதர்மக் கல்வித் திட்டம் பரந்த அளவில் அமுலாகும். பருத்திக் கொட்டை புண்ணுக்கு நமக்கு நமக்கு உணவாகும். டாட்டா பிர்லாக்களின் கொள்ளை அதிகமாகும்!

பன்மொழிப் புலவர்

எழுத்தாளர் சங்கத் தலைவரானூர்!



1960—ம் ஆண்டிற்குத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். சிரிய தமிழ்ப் புலமையும், பன்மொழிப் பாண்டித்யமும் உள்ள அவர் தமிழ் எழுத்தாளர்களுக்குத் தலைவராவது கண்டு தமிழகமே பூரிக்கிறது! இலக்கிய உலகம் அவர் ஏற்றிருக்கும் பணியினுல் செம்மையுறும் என்பது உறுதி!

வாழ்க அவர் தொண்டுள்ளம்!

நன்றி

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் தேர்தலில் வெற்றிபெறும்படி எனக்கு வாக்களித்து ஆதரித்தும், நல்லெண்ண வாழ்த்துத் தெரிவித்தும் உதவிய உள்ளூர், வெளியூர் எழுத்தாள நண்பர்கட்கும், இந்தியாவெங்கும், கடல் கடந்து வாழும் ஆர்வத் தமிழ் எழுத்தாளர், புலவர், பேராசிரியப் பெருமக்களுக்கும், நான் தனித்தனிக் கடிதம் எழுத முடியாமையால் என் நன்றியும் கடப்பாடும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,
கா. அப்பாதுரை.

மாணிக்கம்; சென்னை-14.

(?) 'காங்கிரஸ் ராஷ்டிரபதி' என்பதற்கு 'காங்கிரஸ் அதிபர் சஞ்சீவ ரெட்டி' என்று தமிழ் நாட்டுக் காங்கிரசார் விளம்பரம் செய்திருக்கிருர்களே, ஏன்?

நினைவு தப்பித்தான் 'சுத்த வடமொழி'யைக் கைவிட்டிருக்கிருர்கள். நினைவுபடுத்தி விடாதீர்கள். மறுபடியும் அது 'முருங்கை மரம்' ஏறிவிடும்!

கந்தசாமி; சூலூர்.

(?) இந்திய—சீன தகராறு ஒன்றை மட்டும் காட்டி கம்யூனிஸ்ட்டுகளை கேரளத்தில் தோற்கடிக்க முடியுமா?

முடியாது, உதாரணம் அஸ்ஸாமில் இப்போதைய தேர்தலில் கம்யூனிஸ்ட் வென்றது. துணைக் கண்டமே ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டிய இந்த நேரத்தில் ஒரு கட்சியை ஒதுக்குவது பேதமை, ஒதுக்கி, தேர்தலில் அதன் கால் ஒடிக்க நினைப்பது பேதமையிலும் பேதமை.

சி. பண்டாரம்; ஆம்பூர்.

(?) காங்கிரசிற்கு எங்கிருந்து நன்கொடைகள் வருகின்றன?

பெரும் முதலாளிகளிடமிருந்து மாத்திரமல்ல; அந்தக் கட்சி ஆட்சி செய்யும் அரசாங்கத்திடமிருந்து 'மட்டுமல்ல, கவர்னர் ஆட்சியில்கூட 'அரசாங்க நன்கொடை' அதற்கு உண்டு. அதற்கு உதாரணம் கேரளம்.

கி. தம்பி; கருவலூர்.

(?) சர்வ கட்சிக்குழு தேர்தல் வரை நீடிக்குமா?

நீடித்தால் அது 'பாவ'மில்லை. [illegible] குள்ள அரசினரைச் சேர்த்து எதிர்ப்பதில் யாரும் வெட்கம் காட்டத்தேவையில்லை. நெருங்கி வந்து காங்கிரசின் அதிகாரக் கோட்டையை நொறுக்கும் பணியில் சர்வ கட்சிக்குழு ஈடுபட்டால் தமிழ் மக்கள் வையகம் இருக்குமட்டும், வானகம் இயங்கு மட்டும் அந்தக்'குழு'வை மறக்கவே மாட்டார்கள்.

கல்யாணம்; பொன்மலை.

(?) டில்லியில் அதிகாரம் குவிய வழி செய்ததே ஆச்சாரியார்—என்கிருரே காமராசர்?

இந்த அளவிற்காவது வந்தாரே? டில்லியில் அதிகாரமாவது; குவியலாவது — என்று முழுப் பூசிணியை சோற்றில் மறைத்த பெருந்தகையாளரை, சபை நடுவே டில்லியில் அதிகாரம் குவிந்த உண்மையை ஒப்புக் கொள்ளச் செய்தவரை நாம் ஆச்சாரியாரைப் பாராட்ட வேண்டியவர்கள் தாம்!

கண் திறப்பார்களா ? கரை சேர்ப்பார்களா ?

★✻★

சமுதாயத்தில் பெண்கள் எப்படி ஆமைகளாய்—ஊமைகளாய் அடங்கிக்கிடந்து வாழ்கிறார்களோ அதே நிலையில் வாழ்கிறவர்கள் உண்டென்றால் அவர்கள் மாநில அரசு ஊழியர்கள்தான்.

நல்ல வாழ்வுதான் இல்லை; அரசியல் உண்டா? மூச்சுவிடக் கூடாது. வாழ்வுகோரிப் போராட்டமாவது உண்டா? சீச்சீ...அது சிறியர் செய்கை. அதைக் கையாண்டால் சிறைப்பறவை நிலை. அய்யோ, துயரத்தின் முழு உருவங்கள் இந்த ஊழியர்கள்!

காலையில் எழுகிறான், மலையென 'பைல்'கள் குவிந்து கிடக்கும் காட்சியை எண்ணிப் பார்க்கிறான். அதிகாரியின் மிரட்டும் விழிகளை எண்ணுகிறான். குளிப்பது, உடுப்பது, உண்ணுவது ஆகிய கடமைகள் செய்து கழிக்கப்படுகின்றன.

சோற்று மூட்டையுடனும் தேய்ந்த செருப்புக் காலுடனும் புறப்படுகிறான். கூவியழைக்கிறது, ஆவிசோர அவனைத் தழுவிய இல்லாளின் குரல்; என்ன சொல்கிறது, அது? இல்லாமையைப் பறைசாற்றுகிறது.

'அரிசிப் பானை காலியாகிவிட்டது. பருப்பு இன்றைக்குத்தான் வரும்! புளி சுத்தமாக இல்லை.' இத்தகைய சொற்களைத்தான் உதிர்ப்பாள்; இவனோ வியர்ப்பான்; எப்படி இவைகளைச் சமாளிக்கப் போகிறோம்—என்று வியப்பான். மறுமொழி வராது; மறு விநாடி அவன் அங்கு நிற்கமாட்டான்.

ஆறு மணி நேரத்தில் அலுவலகம் அவன் உடல் சாறு முழுவதையும் பிழிந்துவிடுகிறது. அதற்குள், அவன் எழுதிய தாள்கள், சிந்தனையைக் குழப்பிய சிக்கல்கள், அதிகாரியின் எரிசொற்கள்.......அப்பப்பா......முடிவில் சத்துறிஞ்சப்பட்ட சக்கையாகிறான்!

அலைவாயகப்பட்ட கரும்பாய்த் திரும்புகிறான்; திரும்பியவன் காண்பதென்ன?

இல்லை என்ற சொல்லையே தாரக மந்திரமாய்க் கொண்ட இல்லாள்; வறுமைப் புயலில் அலைக்கழிக்கப்பட்ட தளிர்களாய் விளங்கும் இளம் பிள்ளைகள்; இவர்களைச் சுற்றி நின்று உறுமும் கடன்காரர்கள்; அதிக விலையேறிய பண்டங்கள்! இப்படி வாழ்கிறான் அவன்! அதே நேரத்தில் மத்திய அரசினரின்கீழ் பணி புரிபவன் நிலை இதைவிடக் கொஞ்சம் உயர்ந்த நிலையிலே இருக்கக் காண்கிறான்.

ஒரே ஊரில், ஒரே தெருவில், ஒரே வீட்டில் குடியிருக்கும் ஊழியர்களுக்கு, ஒருவர் மத்திய அரசாங்க ஊழியராக இருப்பதால் உயர்ந்த சம்பளம்; இன்னொருவர் மாநில அரசாங்க ஊழியராய் இருப்பதால் குறைந்த சம்பளம்! அரசாங்க ஊழியர்களிலும் அநியாய வேற்றுமை!

மத்திய சர்க்கார் சூப்ரிடெண்டின் சம்பளம் 260! ஆனால் மாநில சர்க்கார் சூப்ரிடெண்டின் சம்பளமோ 220! மத்திய சர்க்கார் 'லோயர் டிவிஷன் கிளார்க்'குக்கு சம்பளம் 130. மாநில சர்க்கா ஊழியருக்கோ 90—தான்! மாநில சர்க்காரில் வேலை செய்யும் ஒரு பட்டதாரியின் சம்பளமும், மத்திய சர்க்காரில் பணி புரியும் ஒரு பியூனின் சம்பளமும் ஒன்றாக இருக்கிறது என்றால் இதைவிட வெட்கக்கேடு, வேறென்ன?

நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கடனாளியாக வாழ்கிற இவர்கள், தங்கள் உரிமைக் குரலை எடுத்தோதவாவது வழி இருக்கிறதா? இல்லவே இல்லை! மீறி வெளிவருகின்ற குரலையும் அமுக்கிட எத்தனை வஞ்சகச் செயல்கள்; எத்தனை ராஜதந்திரங்கள்! எத்தனை பெரிய மனிதர்களின் மிரட்டல் மொழிகள்! எத்தனை மந்திரிமார்களின் அடக்குமுறை பேச்சுக்கள்!

தடைகளினால் அவர்களின் சோகம் தொலையாது! வேலையும் அதிகரிக்காது! நன்றாக சம்பளம் தந்து நன்றாக வேலை வாங்குவதுதான் விவேகம்.

அதை மாநில அரசு செய்யத் தவறுகிறது. 'நாளை! நாளை' —என்று நாளை ஓட்டுகிறதே அல்லாமல் ஏழையின் குடல் நிறைய வழி செய்யக் காணோம்!

விலைவாசிகள் வான்முகட்டை கீறிச்செல்லும் இக்காலத்தில்—மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் உயர்வதாகப் பேசிக் கொள்ளப்படும் இந்நேரத்தில் மாநில அரசாங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தருவது சாலச் சிறந்தது. காலத்திற்கேற்றாற்போல் வேடமிடும் அமைச்சர்கள் அடுத்த மார்ச்சு மாதம் என். ஜி. ஓ—க்களின் பிரச்சினையைக் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார்கள்! ஒப்பந்தங்களை மீறுவதற்காகவே ஒப்பந்தம் செய்துகொண்ட இட்லரைப் போல், வாக்குறுதியை மீறுவதற்காக வாக்குறுதி தரும் இவர்கள் இந்த வாக்குறுதியைக் கடைப்பிடிப்பார்களா? கடைநிலை ஊழியர்களைக் கரை சேர்ப்பார்களா? இதற்குக் காலம்தான் பதில் சொல்லப்போகிறது.

மனிதனின் கதை...

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த ஃபேபியன் சோஷலிஸ்டுகளின் தத்துவம் பண்டித நேரு அவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

இவ்வாறு 'மார்க்சிசம்' அதாவது சோஷலிசம் — பல்வேறு நாடுகளில் வளர்ந்தபோது பிரான்சு நாட்டில் 'சிண்டிகலிசம்' என்றொரு கோட்பாடு தலை தூக்கியது. ஒவ்வொரு தொழிற்சாலையும் அதன் தொழிலாளர்களுடைய சபையால் (அச்சபைக்கு 'சிண்டிகேட்' என்று பெயர்) நிர்வகிக்கப்பட வேண்டுமென்றும், இம்மாதிரி பல சிண்டிகேட்டுகளின் பிரதிநிதிகள் அடங்கிய சபையால் நாட்டின் தொழில் நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும் இக்கொள்கையின் கர்த்தாக்கள் வலியுறுத்தினர். இந்நிலை தோன்றத் தொழிலாளர் பொது வேலை நிறுத்தம் செய்வதை இவர்கள் பெரிதும் ஆதரித்தனர். 'மார்க்சிச'க் கொள்கையோடு ஆரம்ப காலத்தில் முரண்பட்ட இவர்கள் மார்க்சின் மரணத்துக்குப்பின் அவரையும் ஒரு 'சிண்டிகலிஸ்ட்' என்றே அழைத்துக் கொண்டனர்.

1883-ல் மார்க்ஸ் இறந்த பிறகு தொழில் வளர்ச்சிமிக்க நாடுகளில் பலம் பொருந்திய தொழிற் சங்க இயக்கங்கள் தோன்றலாயின. ஆரம்பத்தில் இவ்வியக்கத் தலைவர்கள் தொழிலாளர் நலன்களில் அக்கரை காட்டினார்கள். எனினும் தொழிற் சங்க வளர்ச்சியால் சொந்தபலம் பெருகியவுடன் தொழிலாளர் நலனைப் புறக்கணித்துத் தங்களுடைய சுகபோக வாழ்விற்குத் தொழிற் சங்கங்களைக் கருவியாக்கிக்கொண்டனர். சோஷல் ஜனநாயக வாதிகள் ஜெர்மனியில் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரான்சு நாட்டில் பிரியாண்ட் என்ற சிண்டிகலிஸ்ட் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவர் பதவிக்கு வந்த பிறகு எந்தக் கோட்பாடுகளால் தான் வளர்ந்தோம் என்பதை மறந்துவிட்டு, வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை தயவு தாட்சண்யமின்றி ஒடுக்கினார். தொழிற் கட்சியின் மூலம் இங்கிலாந்தின் பிரதமரான ராம்சே மாக்டொனால்டு, பதவி வந்தவுடன் தொழிற்கட்சியைவிட்டு வெளியேறினார். இதேபோன்ற நிகழ்ச்சிகள் ஸ்வீடன், டென்மார்க், பெல்ஜியம், ஆஸ்டிரியா ஆகிய நாடுகளிலும் ஏற்பட்டன.

1889—ல் தொழிலாளர்களின் இரண்டாவது இண்டர்நேஷனல் கூடியது. 1818—ல் ரஷ்யப் புரட்சியின் தலைவர் லெனின் அவர்களால் மூன்றாவது இண்டர்நேஷனல் கூட்டப்பட்டது. அது பற்றிய விவரங்களையெல்லாம் பின்னர் எழுதுவேன்.

'மார்க்சிசம்' என்ற கோட்பாடு எப்படியிருந்த போதிலும்—அதற்கு எவ்வளவோ விதமான விமர்சனங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் — உற்பத்திச் சாதனங்களும் பங்கீட்டு நிர்வாகமும் அரசாங்கத்தின் கையிலேயே இருக்கவேண்டுமென்பதை அக்கொள்கையை ஒப்புக்கொண்டவர் எவரும் மறுக்கவில்லை. ஆனால் இக்கொள்கையைச் செயல்படுத்தும் முறையில் இன்றும் உலகில் இருகூறான அபிப்பிராயங்கள் உள்ளன. (1) மக்கள் பிரதிநிதிகள் (பார்லிமெண்ட்) மூலம் இம்மாற்றத்தைப் படிப்படியாகக் கொண்டு வருவது. பிரிட்டனிலுள்ள தொழிற் கட்சியும் ஃபேபியின் சங்கத்தாரும் இக்கொள்கையுடையவர்களே! (2) புரட்சியின் மூலம் இக்கருத்தைக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணமுடைய மார்க்சியவாதிகள். இந்த இரு சாராரிடையே ஏற்பட்டுள்ள வாதப் பிரதிவாதங்கள் இன்னும் வரை தீர்ந்தபாடில்லை.

மார்க்சிஸ்ட் தத்துவத்தை நேரு தனது உலக வரலாற்றில் அழகாக விளக்குகிறார். அதன் சுருக்கமாவது:

"மார்க்சிசம் என்பது என்ன? மனித வரலாற்றையும் அரசியலையும், பொருளியலையும், மனித அவாக்களையும் விமர்சிக்கும் ஒரு வழியே மார்க்சிசம் என்பது. அது வெறும் தத்துவம் மட்டுமல்ல; செயலில் ஈடுபடத் தூண்டும் ஒரு அழைப்பு. மனிதனுடைய நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்ல முயலும் வாழ்க்கைச் சித்தாந்தம். மனிதனுடைய இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தர்க்க ரீதியாக வரையறுக்கச் செய்யும் ஒரு முயற்சி...மனிதனுடைய வாழ்க்கைப் போராட்டத்தை மார்க்ஸ் விஞ்ஞான அடிப்படையில் விளக்க முயல்கிறார். மனித வாழ்க்கை எந்த அளவுக்குத் தர்க்க ரீதியாக அமைந்துள்ளது என்பது சிந்திக்கவேண்டிய விஷயம்."

ஆம். மாதவி, மார்க்சிஸ்ட் தத்துவம் மனித சிந்தனையின் வளர்ச்சியில் ஒரு நிலை என்றே, நான் கருதுகிறேன். அதுவே முடிவான சிந்தனை என்றோ, எல்லா சிக்கல்களுக்கும் அந்தத் தத்துவம் பரிகாரம் அளித்துவிடுமென்றோ நான் நம்பவில்லை. மார்க்சிசத்தை அனுபவ ரீதியான அரசியல் தத்துவமாக மாற்றிய லெனின் கருத்தைக் கீழே கொடுத்திருக்கிறேன்!

"மார்க்சிஸ்ட் தத்துவம் முழுமையடைந்தது என்றோ மறுக்கவொண்ணாதது என்றோ நாம் எண்ண வேண்டிய அவசியமில்லை. மாறாக, புதிய நோக்கு ஒன்றின் திருப்புமுனை அது. அதன் அடிப்படையில, பின்னே தங்கிவிடாமல் இருக்க நினைக்கும் சோஷலிஸ்டுகள். எல்லாத்துறைகளிலும் முன்னேறப் பாடுபட வேண்டும், ஒவ்வொரு தேசமும். அதன் தன் சூழலை ஒட்டி, மார்க்சிஸ்ட் தததுவத்தை விரிவுபடுத்தி. அத்தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளை வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும்."

ரஷ்ய மக்களுக்கு இந்த உபதேசத்தை லெனின் செய்திருந்தாலும், அவ்வாசகங்களில காணப்படும் பொதுமையுணர்ச்சி எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். மார்க்சிசம் பற்றி, இப்போதைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். மீண்டும் இருபதாம் நூற்றாண்டில் உலக நிலை பற்றி ஆராயும்போதும், 'கம்யூனிசம்' என்ற கோட்பாடு மனிதனின் கதையில் ஏற்படுத்தியுள்ள இன்றைய விளைவுகள் பற்றி விரிவாக ஆராய்வேன். அதற்குள் நீ 'மூலதனம்' 'கம்யூனிஸ்ட் அறிக்கை' ஆகியவற்றைப படிப்பதோடு, மார்க்சிசம் பற்றி லெனின், டிராட்ஸ்கி, லாஸ்கி போன்ற பெரியார்கள் மொழிந்துள்ள கருத்துக்களையும், பேரறிஞர் பெர்னார்ட்ஷா தன்னுடைய நூல்களில் அதுபற்றி வெளியிட்டுள்ள சுவையான அபிப்பிராயங்களையும் கற்றுத் தெளிவடை. மற்றவை எனது அடுத்த முடங்கலில்.

அன்புள்ள,

'அகத்தியன்'

கலப்படம்

முதல்வர்களின் பார்வைக்கு மொட்டைக் கடிதங்கள் சில!

சென்னை ராஜ்ய 'சீப் மினிஸ்டர்' அவர்களே!

நமஸ்காரங்கள். நானும் முதலில் காங்கிரசை ஆதரித்துக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் தற்போதில்லை. எனக்கு ஏன் தங்கள் கட்சி பிடிக்கவில்லையென்றால் முதற் காரணம் தங்களுக்குப் பட்டமில்லை; பட்டமாவது இல்லாவிட்டால் போகிறது; படிப்பாவது இருக்கிறதா? அதுவும் இல்லை. அதுதான் போகட்டும். 'லோக காரிய ஞான'மாவது இருக்கிறதா? அதுவும் இல்லை!

அடிக்கடி நீங்கள் பெரியாருடன் குலாவுகிறீர்கள்; மதுரைப் பெரிய கோவிலுக்கு விஜயம் செய்கிறீர்கள்! என்னென்னமோ பேசுகிறீர்கள். அதனால்தான் நான் என் 'பந்துமித்ர ஜனங்களுடன் வெளியேறினேன். சமீபத்தில்கூட ஒன்று பேசியிருக்கிறீர்கள். அதில் பொருளே இல்லை.

"என் வாழ்நாளிலேயே வறுமையை ஒழித்துவிடப் போகிறேன். அதற்காகவே பதவியிலிருக்கிறேன்."

அட ராமரே ராம! இப்படியும் துணிந்து பொய் பேசலாமா? வறுமையை ஒழிப்பது என்ன கிள்ளுக்கீரை வியாபாரமா? பெரிய பெரிய மேதைகளும், அறிவாளிகளும், நிர்வாகத்திறன் படைத்தவர்களும் 'வறுமை ஒழிப்புப் போரில்' பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டிருக்கிறார்கள். எனினும், வெற்றி காணமுடியவில்லையே! கேவலம், ஒரு மாநில அமைச்சரால் முடிகிற காரியமா அது? எத்தனை கோடி மக்கள்? எத்தனை கோடி பிரச்சினைகள்? எத்தனை லட்சம் நம்பிக்கைகள்? இதையெல்லாம் மீறியா நீங்கள் வறுமையை ஒழிக்கப்போகிறீர்கள்? இந்தப் பனிரெண்டு வருட ஆட்சியில் எந்த வறுமையை ஒழித்திருக்கிறீர்கள்? கொஞ்சம் விரலை மடக்குங்கள்!

ஆமாம்: ஒரு சந்தேகம்! எந்த வறுமையைப் பற்றி சொன்னீர்கள்? உங்கள் வறுமையை ஒழிக்கிறேன்—என்றீர்களா? உங்களைத் தாங்கி நிற்கும் கதர் கட்டிய முதலாளிகளின் வறுமையை ஒழிக்கிறேன் — என்றீர்களா? காங்கிரஸ்காரரின் வறுமையை ஒழிக்கிறேன் — என்றீர்களா? உடனே விளக்கம் தேவை! தேவை! தேவை!

இப்படிக்கு,

கையெழுத்திட்டால் பிடித்துக் கொள்வீர்கள் என்ற பயமுள்ளவன்.

✻

அமெரிக்காவுக்குப் போய்க் கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவருக்கு,

வணக்கம். இந்தக் கடிதம் இரத்தத்தால் ஏன் எழுதப்பட்டிருக்கிறது — என்பது உங்களுக்குத் தெரியும். முன்பு இதேபோல் ஒரு நண்பர் உங்களுக்கு எழுதினார். தென்னாட்டிற்கு வாருங்கள் —என்றழைப்பு விட்டார். நீங்கள் வரவில்லை. வறுமைப் பேய்க் கூத்து ஆடும் அந்த நாட்டைப் பார்க்கவில்லை. அதைப் பாராமலேயே 'இந்தியா செழுமையாக இருக்கிறது. 1947-க்குப் பிறகு பெரிய முன்னேற்றம் அடைந்து விட்டது!'—என்று என்னமோ இந்தியா முழுவதும் பார்த்தவர் மாதிரி பேசிவிட்டீர்கள். இதனால் தென்னிந்தியர் உள்ளம் புண்பட்டிருக்கிறது. புண்பட்ட உள்ளங்களின் சார்பில் பெருமூச்சு கலந்த வேதனை வாழ்த்துக்கள். கையெழுத்துப் போடவில்லை. காரணம் தென்னிந்தியனாகிய என்னுடலில் இவ்வளவு ரத்தம் தான் இருக்கிறது.

✻

கக்கன்ஜிக்கு,

எஜமான் அவர்கள் எங்களூர் வந்தீர்கள். நாங்கள் ரொம்ப சந்தோஷப்பட்டோம். நம்ம சாதிக்காரர் மந்திரியாக இருப்பதுபற்றி சந்தோஷப்படவேண்டும்—என்று நீங்கள் சொன்னீர்கள். அதனால் சந்தோஷப்படுகிறோம்.

அன்றைக்கு நாங்கள் வேகாத வெயிலில் வேலை செய்து கொண்டிருந்தோம். நீங்கள் ஜோராக காரிலே வந்து இறங்கினீர்கள். குழி வெட்டிக்கொண்டிருந்த எங்களிடம் வந்தீர்கள்; பேசினீர்கள்! (அந்தப் பேச்சில் எனக்கு ஒரு சந்தேகம் வந்து விட்டது. அதனால்தான் பெரிய தலையாரி மகனைவிட்டு இந்தக் கடிதத்தை எழுதச் சொல்கிறேன்.)

சாமீ! நீங்கள் அன்றைக்கு சொன்னீர்கள், "உங்களைப் போலவே எங்களப்பாவும் வேலை செய்து கொண்டிருந்தார்!"—என்று! ரொம்ப சந்தோஷம். "ஆனால் நான் இன்றைக்கு மந்திரியாகி இருக்கிறேன்." — என்றீர்கள். ரொம்ப ரொம்ப சந்தோஷம்! "ஆகவே, உங்களுக்குத் தான் பட்டம் பதவியெல்லாம்!"- என்றீர்கள்.

இந்த இடத்தில்தான், சாமீ, புரியவில்லை. உங்கள் தகப்பனார் எங்களைப்போல வேலை செய்தார். நீங்கள் உயர்ந்தீர்கள். இந்த நியாயப்படி பார்த்தால் நாங்கள் எப்படி உயர முடியும்? எங்கள் பிள்ளைகுட்டிகள்தானே உயரமுடியும்?

என்ன சாமி, எனக்குத் தெரிந்த 'நியாயம்'கூட உங்களுக்குத் தெரியலையே? அப்பவும் எங்கள் பேரன் சொன்னான், உங்களைப் பற்றி! நம்ம சாதிக்காரர் மானத்தையே கெடுக்கிறதாகச் சொன்னான். பின்னே இப்படி நியாயத்தைக் 'கசாமுசா'ன்னு கந்தரகோளம் பண்ணிகிட்டு, எப்படி மந்திரிப்பதவியிலே இருக்கிறீங்க? இவ்வளவு மோசமான பதவியையா தர்றேன்னீங்க? இப்பேர்ப்பட்ட பதவியைத் தருவதாக இருந்தால் அது வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!

இப்படிக்கு,

கையெழுத்துப் போடத் தெரியாதவன்.

★

'அரியலூர் சர்தார்' அளகேசனுக்கு,

பாராட்டுதல்கள். நீங்கள் ராசாராமுக்கு அடுத்தபடி காங்கிரசின் தமிழ்நாட்டு ராஷ்டிரபதி பீடத்திற்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு 'நல்ல நாள், யோகம், சூலை' இவைகளில் நம்பிக்கை இருந்தால் காலண்டரை எடுத்துப் பாருங்கள். கண்டிப்பாக அதிர்ச்சி யடைவீர்கள். நீங்கள் பதவியேற்றபோது ஒரு 'யோகம்' இருந்திருக்கும். அந்த யோக பலன் காங்கிரசிற்குத்தான் சித்தியாகும்—என்று குறிக்கப்பட்டிருக்கும். அப்பேர்ப்பட்ட 'யோகம்' எது என்று அறிய ஆவலாய் இருக்கிறதா? இதோ சொல்கிறேன்:

மரணயோகம்! ஆம்; காங்கிரசிற்கு! ராசாராம் தன் அதிசயப் பேச்சினால், ஆபூர்வசெயல் முறையால் காங்கிரசின் பாதி உயிரைப் போக்கடித்துவிட்டார். இப்போது நீங்கள் வந்திருக்கிறீர்கள், அவரது பணியைத் தொடர்ந்து செய்ய!

பின், என்னய்யா? கொஞ்சமாவது காந்தியின் அடிச் சுவட்டில் நடப்பவர்கள் என்று நினைப்பிருந்தால், சட்டமன்றத்தில், ஒரு காங்கிரஸ் உறுப்பினர்,

"என் தொகுதியில் வந்து யாராவது உணவு விலைக் குறைப்பைப் பற்றிப் பேசினால் கையை வெட்டுவேன்; விரலை வெட்டுவேன்!"

—என்று பேசலாமா? இதுதான் காந்தி சொல்லித் தந்த, அகிம்சையா? இதுதான் நேரு கற்றுத்தந்த நேர்மையின்பாற்பட்ட பேச்சா? இதுதான் காமராசர் போதிக்கிற கண்ணியமா?

இந்த அராஜகப் பேச்சுகள் உங்கள் தலைமை பிறக்கும்போது பிறந்திருக்கின்றன. இது நீடித்தால், பிறர்கை வெட்டப்படாது; காங்கிரசிற்கு சமக்குழி வெட்டப்படும்—என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளாவிட்டால் வருங்கால மக்கள் உங்களை நினைவில் வைத்துக் கொள்ள மாட்டார்கள். ஏன் வருங்கால மக்கள் என்று குறிப்பிடுகிறேன்? நிகழ்கால மக்கள் உங்களை மறக்கவே மாட்டார்கள்—என்பதை எடுத்துக் கூறத்தான்!

எதை மறந்தாலும் உங்களுக்கு சர்தார் பட்டம் வாங்கித் தந்த அரியலூரை மறப்பார்களா? அந்த ஊர் ஆற்று வெள்ளத்தில் மிதந்த பிணங்களை மறப்பார்களா? பேதைப் பெண்கள், 'பால்குடி' மறவாத பச்சைக் குழந்தைகள், கண்பார்வை மங்கிய கிழவர்கள், திருமணத் தம்பதிகள்—அத்தனை பேரும் செத்தழுகி சிறு சிறு சதைத் துண்டங்களாய் ஆன சோகக் கதையை மக்கள் மறப்பார்களா?

உலகைக் குலுக்கிய இந்த விபத்து நடந்தபின்னும், ரயில்வே மந்திரி ராஜிநாமா செய்த பின்னும் துணை மந்திரி பதவியை இறுக்கிக் கட்டிப் பிடித்துக் கொண்ட உங்களை இந்த மக்கள் மறப்பார்களா?

அன்பழகன், மதியழகன், அறிவழகன்—என்ற புலவர் போற்றும் அழகுத் தமிழ்ப் பெயர்களை இழி சொற்களால் கேவலப்படுத்தி, தமிழ் எழுத்துப் படித்த அத்தனை பேரின் கண்டனங்களையும் வாங்கிக்கொண்ட உங்களை, தமிழகம் மறந்து விடுமா? மறக்காது; ஒருபோதும் மறக்காது!

அரியலூர் சர்தார் அவர்களே உங்களுக்குக் 'கடைசியாக ஒரு வேண்டுகோள். மந்திரிப் பதவியில் இருக்கும்போது ஒரு விபத்து நடக்கும்படி விட்டீர்கள். தயவு செய்து இந்தப் பதவியில் இருக்கும்போது ஒரு 'விபத்தை' ஏற்படுத்தி காங்கிரசை கால வெள்ளத்தில் பிணமாக மிதக்க விட்டுவிடாதீர்கள்! 1942-ல் இரு கையிழந்த காரணத்தால் கையெழுத்துப் போடவில்லை.

இலக்கிய மணம் கமழும்
வாழ்வியல் வகை கூறும்...

முத்தாரம்

'சாவை'ப் பற்றி உலகப் பெரு மேதைகள்
தந்த பொன்மொழிகளுடன்

இதழ்-33
விற்பனையாகிறது!

62. மார்க்சிசம்.

அன்புள்ள மாதவி,

மார்க்சிசம் என உலகத்தால் அழைக்கப்படும் அத்தத்துவம் குறித்து மேற்கொண்டு சில விவரங்களை நீ அறியும் பொருட்டே இக்கடிதம் எழுதுகிறேன்.

1864-ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் முதல் தொழிலாளர் காங்கிரசை மார்க்ஸ் கூட்டினர் என்று எழுதியிருந்தேனல்லவா? அந்தக் காங்கிரசில் பங்கெடுத்துக்கொண்ட பாக்குனின் என்ற அராஜகவாதிக்கும் மார்க்சுக்குமிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றின. பாக்குனின் தொழிலாளர் புரட்சியை உடனடியாகத் தொடங்கிப் பலன் காண வேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆனால் கார்ல் மார்க்சோ புரட்சி ஆரம்பிப்பதற்குமுன் தொழிலாளர்கள் புரட்சி செய்வதற்கு ஏற்ற முறையில் பக்குவப் படுத்தப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். சோஷலிசத் தத்துவம் பற்றிய அடிப்படை அறிவைத் தொழிலாள வர்க்கம் பெற்றிருந்தாலொழிய தொழிலாளர் புரட்சி விரும்பிய வெற்றியைப் பெற முடியாது என்பது மார்க்சின் சித்தாந்தம். பாக்குனின், மார்க்ஸ் ஆகியவரிடையே இந்த அபிப்பிராய பேதம் தோன்றுவதற்குக் காரணமும் இருந்தது. பாக்குனினும் அவருடைய கொள்கையைப் பின்பற்றியவர்களும் தொழில் துறையில் பிற்போக்கான நாடுகளின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டவர்கள். அவர்கள் படித்த வேலையற்றவர்களாக தங்கள் நாட்டில் இருந்தவர்கள். அப்பொழுதிருந்த சமூக வாழ்க்கையில் தங்களுக்கென ஒரு தனியிடம் இன்றித் தவித்தவர்கள். ஆகவே, சமூகத்தில் எந்த வழியிலாவது உடனடியான மாறுபாட்டைக் கொண்டுவந்து விட வேண்டுமென்று விழைந்தவர்கள்.

ஆனால் கார்ல் மார்க்சின் சீடர்கள் தொழில் துறையில் வெகுவாக முன்னேறியிருந்த ஜெர்மனியிலிருந்து வந்து கலந்துகொண்டவர்கள். மார்க்ஸ் திட்டமிட்டுச் செயலாற்ற விரும்பினர். தொழிலாளர் ஸ்தாபனங்களை உறுதியான அடிப்படையில் முறையாக அமைத்து, அதன் உறுப்பினர்களுக்கு சோஷலிசத் தத்துவத்தில் கல்வி புகட்டிய பிறகே புரட்சிச் செயல்களில் ஈடுபடுத்த மார்க்ஸ் நினைத்தார். முடிவில் மார்க்சின் சித்தாந்தமே

பி. சி. கணேசன்

வெற்றிபெற்றது. அகில உலகத் தொழிலாளர் ஸ்தாபனம் நிறுவப்பட்டது. இதுதான் வரலாற்றுப் பிரசித்திபெற்ற "முதல் தொழிலாளர் இண்டர்நேஷனல்" ஆகும்.

1871-ல் பாரிஸ் கம்யூன் கூடியது. தொழிலாளர் சோஷலிசக் கோட்பாடுணர்ந்து முதல்முறையாக உலக வரலாற்றில் புரட்சியைத் தொடங்கினர். புரட்சி முடிவில் தோற்றது. தொழிலாளர்களின் தலைமை நிலையத்தை மார்க்ஸ் நியூயார்க் நகருக்கு மாற்றினர். பாக்குனினின் கொள்கையைப் பின்பற்றியோருடைய ஆதிக்கத்தைத் தவிர்ப்பதற்கு மார்க்ஸ் இம்மாறுதலைச் செய்திருக்கக் கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.

மார்க்சிசம், வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயரில் அழைக்கப்படுகிறது. உதாரணமாக தொழில் துறையில் முன்னேறியிருந்த ஜெர்மனி, ஆஸ்திரியா போன்ற நாடுகள் 'சோஷல் ஜனநாயகம்' எனத் தங்கள் சோஷலிசக் கோட்பாட்டினைக் கூறிக் கொண்டன. இங்கிலாந்தில் மார்க்சின் சோஷலிசம் வேர் விடவில்லை. அதற்குக் காரணமாக அப்பொழுதிருந்த அந்நாட்டின் செல்வ நிலையைக் குறிப்பிடலாம். வறுமையில்லாத இடத்தில் மார்க்சிசம் வளர முடியாமல் போனதற்கு வரலாற்றில் கிடைக்கும் பல சான்றுகளில் இதுவும் ஒன்று. பிற்காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த ஒரு சில மேதைகள் புரட்சி மார்க்கமின்றிப் படிப்படியாகவே சோஷலிசத் தத்துவத்தை அமுல் செய்ய முடியுமென்று நம்பினர்கள். இவர்களுக்கு ஃபேபியன் சோஷலிஸ்டுகள் எனப் பெயர். சிட்னிவெப் அவர்களில் குறிப்பிடத்தக்கவர். இளமைப் பருவத்தில் நாடக மேதை ஜார்ஜ் பெர்னர்ட்ஷாவும் அந்தக் குழுவில் இருந்தார்.

[தொடர்ச்சி பக்கம்—10]

இரத்த பாசம்

"வெறும் செங்கல்லை அடுக்கினல் சுவர் நிலைக்காது; செங்கற்களுக்கு இடையில் மண்சாந்து பூசினலும், மழை பெய்தால் கரைந்துவிடும்; சுண்ணும்பு பூசினல் கொஞ்சம் கெட்டியாக இருக்கும்; சிமெண்டைப் பூசினல், இடித்தாலும் சுவர் உடையாது. அதைப்போல நமக்கும், அப்துல் காதருக்கும் ஏற்பட்டுள்ள உறவு கெட்டியாக சிமெண்ட் வைத்ததுபோல் ஏற்பட்டிருக்கிறது! சிந்திய இரத்தத்தால் ஒட்டப்பட்டிருக்கிறது நமது உறவு! இதை எதனுலும் பிளக்க முடியாது!

"காங்கிரசுக்காரர்களுக்குள்ளே இருக்கும் உறவு 'பர்மிட்' கொடுப்பதிலும், அதை வாங்குவதிலும்தான் அமைந்திருக்கிறது; அதிலேதான் அவர்களுடைய பந்தம் பாசமெல்லாம் இருக்கின்றன.

"நம்முடைய தோழர் ஒருவர் இரத்தம் சிந்தினல் அதனுலே நம்முடைய கண்களிலிருந்து கண்ணீர் வடியும்! தோழர் அப்துல் காதர் சிந்திய இரத்தத்தை அன்பழகன் கண்ணீர் துடைக்கும்! கருணநிதி கண் கலங்கினல் அதிலே என்னுடைய கண்ணீரும் ஒட்டியிருக்கும்! இப்படி ஒருவருக்கொருவர், சிந்திய இரத்தத்தால், கண்ணீரால் பாசம் கொண்டிருக்கிறேம்!"

(8—12—59-ந் தேதி நடந்த மேயர் துணை மேயர் பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு.)

மறைமலையடிகள் வரலாறு

மறை. திருநாவுக்கரசு

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துக் கூறுகிறது நூல். அவர் பிறப்பும் வளர்ப்பும் தமிழின் பிறப்பு வளர்ப்புப்போல் இனிமையுடையதாய் இருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டில் ஆரிய நஞ்சைக் கலந்திட்ட தமிழ்த் துரோகிகளை அவர் நாள்தோறும், நிமிடந்தோறும் வென்றுவந்ததை இந்நூல் மிகைபடாமற் கூறுகிறது. அவரது வளர்ச்சி, தனித்தமிழின் வளர்ச்சியாகக் காணுகிறேம்.

அடிகளார் பழகிய நண்பர்கள், தலைவர்கள்—இவர்களைப்பற்றிய குறிப்புகளும் உள்ளன. அவற்றில் திரு. வி க-வைப்பற்றி பலபடப் புகழ்ந்திருப்பது நெஞ்சம் களிக்கத்தக்க வகையில் இருக்கிறது.

இந்நூல் பெரிதும் போற்றத்தக்க வகையில் தொகுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட துன்ப, துயரங்களை இப்பெருநூல் பறைசாற்றுகிறது.

ஆயினும், திராவிட நாட்டுப் பிரிவினைபற்றி அடிகள் கருத்து—என்ற மகுடமிட்ட பகுதியில் பெரும்பாலும் அடிகளின் கருத்து மறைக்கப்பட்டு, எழுதியவரின் கருத்து வெளிப்பட்டிருப்பது பெருங்குறை. 'இந்தியா முழுதும் திராவிட நாடே' — எனக் கூறிய அடிகளாரின் நல்ல கருத்து இப்படிச் சிதைவது தவிர்க்கப்பட வேண்டியது. அதோடு பெரியார் ஈ. வெ. ரா— பற்றிக் கூறிய குறைகளில் பெரிதும் நம்பத்தகாதவை இருக்கின்றன.

பொதுவில், இந்நூல் பெரு முயற்சியின் விளைவு; அத்தகு முயற்சிக்கு நம் பாராட்டு.

[கிடைக்குமிடம்: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை-1. பக்கங்கள்: 878; விலை ரூ. 15.]

ஐ. நா. சபைத் தீர்ப்பு

மு. கணபதி.

திராவிட நாடு திராவிடருக்கே—எனும் தாரக மந்திரத்தை கற்பனைக் காட்சிகள் மூலம் காண்பது ஒருவகை. அதில் காரண காரிய விளக்கத்தைக் காட்டி, வரலாற்று உண்மைகளைத் துணைக்கழைத்து விடுதலைப் பிரச்சினையை வெகு அழகாகத் தீர்த்திருக்கிறர் ஆசிரியர.

சிற்சில இடங்களில் விவாதம் சுவையாகவும் இருக்கிறது. நல்ல முயற்சி; பல வெள்ளை உள்ளங்கள் இந்த நல்ல நூலால் திராவிட இயக்கம் பற்றி சிந்திக்கத் தொடங்குவது உறுதி.

எளிய தமிழ்; இனிய நடை; ஆனலும் எடுத்துக் கொண்ட பொருள் மிகப் பெரிது. பணியை செவ்வனே செய்திருக்கிறர், நூலின் ஆசிரியர்.

[கிடைக்குமிடம்: மதி நூல் நிலையம். 8-8-பி; செந்தண்ணீர்புரம், பொன்மலை. திருச்சி. பக்கங்கள்: 58. விலை; 1—25.]

திருச்சி, நாதன் கம்பெனியாரின் பொங்கல் வாழ்த்துக்கள்!

கண்ணைக் கவரும் அழகுடன் திருச்சி நாதன் கம்பெனியார் வெளியிட்டிருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள் கிடைக்கப் பெற்றேம். முற்றிலும் புதிய முறையில் தோன்றுகின்ற அந்த வாழ்த்துக்களில் அறிஞர் அண்ணு, நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், மு. கருணநிதி முதலியோரின் மூவண்ணப் படங்கள் இதுவரை கண்டிராத தோற்றங்களில் அச்சாகி இருக்கின்றன. தவிர, தோழர் கருணநிதியும், அமைச்சர் பக்தவத்சலமும் உரையாடுகின்ற காட்சி ஒன்றையும் வெளியிட்டிருக்கிறர்கள். மிகக் குறைந்த விலையில், நிறைந்த வனப்புடன் வாழ்த்துக்களை வெளியிட்டிருக்கிற நாதன் கம்பெனியார் வாழ்த்துக்குரியவர்கள். அந்த வாழ்த்துக்கள் முத்துவேல் பதிப்பகம், 77, மதுரை ரோடு, திருச்சி-8 என்கிற முகவரியில் கிடைக்கும்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணநிதி. 'முரசொலி' அச்சகம் 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு